
வ. மக்ஸிமொவா

# கா. மார்க்ஸ் எழுதிய “கூலியுழைப்பும் மூலதனமும்”

முன்னேற்றப் பதிப்பகம்



51

வ. மக்ஸிமொவா

ML15

# கா. மார்க்ஸ் எழுதிய "கூலியுழைப்பும் மூலதனமும்"

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்:
பேராசிரியர் நா. தர்மராஜன், எம்.ஏ.

**Максимова В.**
О РАБОТЕ К. МАРКСА
«НАЕМНЫЙ ТРУД И КАПИТАЛ»
*на тамильском языке*

**Maximova V.**
MARX'S "WAGE LABOUR AND CAPITAL"
*in Tamil*

© Progress Publishers, 1986
© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1989
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

M $\frac{0102010000-350}{014(01)-89}$ 307—89

ISBN 5-01-001464-5

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . 5

கூலியும் உழைப்புச் சக்தியும் . . . 27

கூலி எப்படி நிர்ணயிக்கப்படுகிறது? 53

உற்பத்தி உறவு என்ற முறையில் மூலதனம் . . . . . . . 66

மூலதனத் திரட்சியும் தொழிலாளி வர்க்கத்தின் நிலையின் மீது அதன் தாக்கமும் . . . . . 94

## முன்னுரை

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் சுமார் 300 மில்லியன் ஆண்களும் பெண்களும் கூலித் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளியும் பின்வரும் பிரச்சினைகளைப் பற்றி என்றைக்காவது ஒரு நாள் சிந்தித்தே ஆக வேண்டும்: இன்று மேலாதிக்கம் செலுத்துகின்ற கூலியுழைப்பு உறவுகள் நியாயமானவையா அல்லது அநீதியானவையா? தொழிலாளர்களால் தங்களுடைய நிலையை அபிவிருத்தி செய்துகொள்ள முடியுமா? முதலாளித்துவ சமூகத்தின் எதிர்காலம் என்ன?

இன்றைய முதலாளித்துவ உலகத்தில் உழைக்கும் மக்களை மேற்கூறிய மற்றும் இதர அவசரப் பிரச்சினைகள் எதிரிடுகின்றன. மார்க்ஸ் எழுதிய ஆரம்ப நூல்களில் ஒன்றும் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துகளின் உருவாக்கத்தில் முக்கியமான பாத்திரத்தை வகித்த நூலுமான கூலியுழைப்பும் மூலதனமும் என்னும் நூலில் இவற்றுக்கு பதில்களைக் காண முடியும்.

1840க்களின் பிற்பாதியில் விஞ்ஞான கம்யூனிசம் தோன்றியது. முதலாளித்துவப் பொருளாதாரம், தொழிலாளர் இயக்கம் மற்றும்

சமூகச் சிந்தனையின் வளர்ச்சி அதற்குப் பாதையை அமைத்துக் கொடுத்திருந்தது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் தொடங்கிய, உடலுழைப்பைக் கொண்டு செய்யப்படுகின்ற பட்டறைத் தொழிலிலிருந்து பெரிய அளவு இயந்திரத் தொழில்துறைக்கு மாறுவதைக் குறித்த தொழில்துறைப் புரட்சி முதலாளித்துவத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான கட்டமாக இருந்தது. அந்தப் பாதையை முதலில் பின்பற்றிய நாடு பிரிட்டன். அந்த நாட்டில் பருத்தி நூற்பும் நெசவுத் தொழிலும் வேகமாக இயந்திரமயமாக்கப் பட்டன. இத்துறைகளில் புதிய இயந்திரங்கள் பரவலாக உபயோகிக்கப்பட்டது மற்ற துறைகளிலும் புதிய இயந்திரங்களைப் பயன்படுத்துவதையும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதையும், இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு இயந்திரங்களைப் பரவலாக உபயோகிப்பதையும் பொருளாதார ரீதியில் அவசியமாக்கியது. இவை அனைத்தும் பல இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற எளிமையான முறையிலிருந்து இயந்திர ரீதியான உற்பத்தி முறைக்கு மாறுவதற்குரிய முன்நிபந்தனைகளைத் தோற்றுவித்தன. 1840க்குள் பிரிட்டிஷ் தொழில்துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் பயன்படுத்தப்பட்ட நீராவி இயந்திரங்களின் மொத்த அளவு 6,20,000 குதிரைச் சக்திகளை எட்டியிருந்தது. நிலக்கரி, தேனிரும்பு மற்றும் எஃகு உற்பத்தி அதிகரித்தது;

பொறியியல் மற்றும் கப்பல் கட்டும் தொழில் வேகமாக வளர்ச்சியடைந்தன. 1840க்களின் இறுதியில் பிரிட்டனில் 10,000 கிலோமீட்டர் ரயில் பாதைகள் இருந்தன. நாடு முழுவதிலும் மான்செஸ்டர், கிளாஸ்கோ, பர்மிங்காம் ஆகிய நகரங்களைப் போன்ற மாபெரும் தொழில்துறைக் கேந்திரங்கள் தோன்றியிருந்தன.

பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இதர நாடுகள் பெரிய அளவு தொழில்துறையின் வேகமான வளர்ச்சியில் பிரிட்டனைப் பின்பற்றின. 1840க்களின் பிற்பாதியில் பிரான்சில் ஏற்கெனவே சுமார் 5,000 நீராவி இயந்திரங்கள், சுமார் 2,000 கிலோமீட்டர் ரயில் பாதைகள் இருந்தன. ருவான், லீல் மற்றும் அல்சாஸ்-லோரைனில் இருந்த பஞ்சாலைக் கேந்திரங்களில், உலோகத் தொழிற் கேந்திரமான லுவார் பள்ளத்தாக்கில் பெரிய அளவு முதலாளித்துவத் தொழில்துறை வளர்ச்சியடைந்திருந்தது.

ஜெர்மனியும் கைத்தொழில் மற்றும் பட்டறைத் தொழில்துறையிலிருந்து இயந்திரங்களையும் நீராவி இயந்திரங்களையும் பயன்படுத்துகின்ற ஃபாக்டரி முறைக்கு மாறிக் கொண்டிருந்தது; எனினும் அதன் வேகம் குறைவாக இருந்தது. வளர்ச்சியடைந்து கொண்டிருந்த தொழில்துறைக் கேந்திரங்கள் உள்ள (கொலோன், கிரெபெல்ட், எல்பெர்பெல்ட், ஸோலிங்கென்) ரைன் பிரதேச

மும் அங்கே வேகமாக முன்னேறியது. அங்கே உலோகத் தொழில், பருத்தி மற்றும் பட்டு நெசவுத் தொழில் ஆகியவை அதிக வளர்ச்சியடைந்த தொழில்துறைகளாக இருந்தன. 1847இல் ஜெர்மன் அரசுகளில் ஒன்றாகிய பிரஷ்யாவில் 1,000க்கும் அதிகமான நீராவி இயந்திரங்களும் 3,000 கிலோமீட்டருக்கும் அதிகமான ரயில் பாதைகளும் இருந்தன.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையைக் காட்டிலும் முதலாளித்துவ உற்பத்தி முறை மேலானது என்பது தொழில்துறைப் புரட்சியின் போது நிரூபிக்கப்பட்டது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்றம் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதற்கு, உற்பத்தியைக் குவிப்பதற்கு, இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு, போக்குவரத்துத் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கு, சர்வதேச வர்த்தகத்தை ஆழப்படுத்துவதற்கு, நாடுகளுக்கு இடையில் பொருளாதாரப் பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கு உதவியது. அதே சமயத்தில் முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த தீமைகளும் முரண்பாடுகளும் ஆரம்பத்திலிருந்தே முனைப்பாக வெளிப்பட்டன. முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவச் சுரண்டலுக்குப் பதிலாகக் கூலி அடிமைத்தனத்தைக் கொண்டு வந்து விவசாயிகளையும் கைவினைஞர்களையும் அழித்தது, தனிப்பட்ட முதலாளிகளுக்கு இடையிலும்,

முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலும் மூர்க்கமான போட்டிப் போராட்டத்தை ஏற்படுத்தியது, உற்பத்தி அராஜகத்தையும் நெருக்கடிகளையும் தோற்றுவித்தது.

முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி உழைப்புக்கும் மூலதனத்துக்கும்இடையில் மோதலைத் தீவிரப்படுத்தியது. உற்பத்தியில் இயந்திரங்களைப் பயன்படுத்தியது முதலாளிகள் கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுதலைத் தீவிரப்படுத்துவதற்கு, அவர்களை இயந்திரங்களின் ஒட்டுப்பகுதியாக, மூலதனத்தின் ஒட்டுப்பகுதியாக மாற்றுவதற்கு உதவியது. முதலாளித்துவ இயந்திரத் தொழில்துறையின் வளர்ச்சி முதலாளித்துவ சமூகத்தில் வர்க்கங்கள் இரு முனைக்கோடிகளாகப் பிரிதலையும் வகைப்படுத்தப்படுதலையும் தீவிரப்படுத்தியது. தொழிற் புரட்சி ‘‘உண்மையான முதலாளி வர்க்கத்தையும் உண்மையான பெருவீதத் தொழில்துறை பாட்டாளி வர்க்கத்தையும் படைத்துருவாக்கி அவற்றை சமுதாய வளர்ச்சியின் முன்னணியில் தள்ளிவிட்டது’’ என்று எங்கெல்ஸ் சுட்டிக் காட்டினார்.*

தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி ஃபாக்டரித் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அவர்களை நிரந்தர கூலித்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 2, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கம் 105.

தொழிலாளர்களாக மாற்றியது. தொழிற் புரட்சியின் போது தொழிலாளி வர்க்கம் முதல் தடவையாக சுதந்திரமான சமூக சக்தியாக வரலாற்றுக் களத்தில் தோன்றியது. தொழிலாளர்களின் முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கம் ஆரம்பத்தில் பட்டினிக் கலகங்கள், இயந்திரங்களை அழித்தல் மற்றும் இதர தன்னியல்பான மறுப்பு வடிவங்களில் வெளிப்பட்டது. பெரிய அளவு இயந்திரத் தொழில் வளர்ச்சி அடைந்த பொழுது தொழிலாளர்களின் வர்க்க உணர்வு மேலும் வலுப்பெற்றது; அவர்கள் தங்களுடைய உரிமைகளுக்கு நடத்திய போராட்டம் அதிக முதிர்ச்சியான, அமைப்பு ரீதியான இயல்பைப் பெற்றது. தொழிற்சங்கங்களும் பரஸ்பர உதவிச் சங்கங்களும் நிறுவப்பட்டன, வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. முதலாளித்துவ ஒடுக்குமுறையினாலும் கீழான வாழ்க்கைத் தரங்களாலும் விரக்தியடைந்த தொழிலாளர்கள் மூலதனத்தைப் பகிரங்கமாக எதிர்த்துப் போராடுவதற்கு மேன் மேலும் அதிகமாகக் கிளர்ந்தெழுந்தார்கள்.

பிரான்சில் (லியோன், 1831 மற்றும் 1834) மற்றும் 1844 ஜூனில் சைலீஸியாவில் நடைபெற்ற நெசவாளர் கலகங்கள் இப்படிப்பட்டவையே. 1830க்களின் பிற்பாதியில் பிரிட்டனில் சாசன இயக்கம் தோன்றியது. அது பிரிட்டிஷ் தொழிலாளர்களின் முதல் அரசியல் வெகுஜன ரீதியான புரட்சிகர இயக்கமாகும். எல்லோருக்கும் வாக்குரிமை, வேலை நேரத்தைக் குறைத்

தல், கூலி உயர்வு மற்றும் இதர கோரிக்கைகளடங்கிய மக்கள் சாசனத்தை அவர்கள் தயாரித்தார்கள். சாசன இயக்கம் 1840க்களில் அதன் சிகரத்தை எட்டியது; சுமார் 50,000 மக்கள் அதில் திரட்டப்பட்டிருந்தார்கள்.

பிரான்சில் லியோன் நெசவாளர்களின் எழுச்சி, பிரிட்டனில் சாசன இயக்கம், ஜெர்மனியில் சைலீஷிய நெசவாளர்களின் எழுச்சி ஆகியவை தொழிலாளர் இயக்கம் பொதுவான ஜனநாயகக் கோரிக்கைகளின் எல்லைகளுக்கு அப்பால் போய்விட்டதை, ''ஐரோப்பாவின் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளின் வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் முன்னணிக்கு வந்துவிட்டது''* என்பதை எடுத்துக்காட்டின. வளர்ச்சியடைந்து கொண்டிருந்த தொழிலாளர் இயக்கம், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கோரிக்கைகளை விஞ்ஞான ரீதியாக முன்வைக்க வேண்டும் என்று கோரியது; அதாவது அதற்கு விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் அவசியமாயிற்று.

சமூக சிந்தனையின் முந்திய வளர்ச்சி மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தின் உருவாக்கத்தின் மீது முக்கியமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. மார்க்சியம் உலக நாகரிகத்தின் வளர்ச்சி என்னும் ராஜபாட்டைக்கு வெளி

* F.Engels, *Anti-Dühring*, Moscow, Progress Publishers, 1969, p. 36.

யில் தோன்றவில்லை என்பதை லெனின் வலியுறுத்தினார்.*ஜெர்மனியின் மூலச்சிறப்புடைய தத்துவஞானம், இங்கிலாந்தின் மூலச்சிறப்புடையஅரசியல் பொருளாதாரம் மற்றும் பிரான்சின் கற்பனாவாத சோஷலிசத்தின் சாதனைகளைப் பொதுமைப்படுத்தி, விமர்சன ரீதியாக ஆராய்ந்த பிறகு மார்க்சும் எங்கெல்சும் ஒருங்கிணைந்த புரட்சிகரத் தத்துவத்தை விரித்துரைத்தார்கள். அவர்கள் சில பத்தாண்டுக் காலம் அதைத் தயாரித்தார்கள் என்றாலும் 1840க்களில் அதற்கு அடிப்படை அமைக்கப்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் 1840க்களில் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை, தொழிலாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தின் மற்றும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குத் தவிர்க்க முடியாத மாற்றத்தின் முக்கியமான கருதுகோள்களை வகுத்துக் கூறினார்கள்.

1840க்களில் மார்க்சும் எங்கெல்சும் எழுதிய நூல்கள் அரசியல் பொருளாதாரத்திலும் புரட்சியை ஆரம்பித்தன. மார்க்சியத்தின் மூலவர்கள் முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியின் பொருளாதார விதியை நிறுவினார்கள்,

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1979, பக்கம் 102 பார்க்க.

முதலாளித்துவம் உறுதியாக அழிந்து, கம்யூனிச சமூகம் தோன்றும் என்பதை நிரூபித்தார்கள். 1840க்களின் பிற்பாதியில் மார்க்ஸ் எழுதிய நூல்களில் உபரி மதிப்புத் தத்துவத்தின் தலைமையான தொடக்கக் கூறுகள் ஏற்கெனவே இடம் பெற்றிருந்தன. மார்க்ஸ் அவற்றை மேலும் ஆராய்ந்து முதலாளித்துவச் சுரண்டலின் பொறியமைவைக் கண்டுபிடித்தார்.

இக்காலகட்டத்தில் மார்க்ஸ் எழுதிய நூல்களில் **கூலியுழைப்பும் மூலதனமும்** முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. 1847 டிசம்பர் மாதத்தின் பிற்பாதியில் ஜெர்மன் தொழிலாளர் கழகத்தில் மார்க்ஸ் நிகழ்த்திய சொற்பொழிவுகள் அதற்கு அடிப்படையாக இருக்கின்றன. மார்க்சும் எங்கெல்சும் இக்கழகத்தை 1847 ஆகஸ்ட் மாதக் கடைசியில் பிரஸ்ஸெல்சிலிருந்த ஜெர்மானியத் தொழிலாளர்கள் மத்தியில் அமைத்திருந்தார்கள். அச்சமயத்தில் மேற்கு ஐரோப்பாவில் பூர்ஷ்வா ஜனநாயக இயக்கம் ஓங்கியிருந்தது; அதில் தொழிலாளர்களும் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள். கற்பனாவாத சோஷலிசக் கருத்துகளின் தாக்கத்தில் தொழிலாளர்களடங்கிய பல்வேறு சமூக ஸ்தாபனங்கள், இரகசியச் சங்கங்கள் மற்றும் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ''எல்லோரும் சகோதரர்களே'' என்னும் குறிக்கோள் வாசகத்தைக் கொண்ட நியாயவாதிகளின் சங்கம் பெரிய அளவில் சர்வதேசத் தொழிலாளர்

ஸ்தாபனமாக இருந்தது. மார்க்சும் எங்கெல்சும் 1847இன் தொடக்கத்தில் அச்சங்கத்தில் சேர்ந்து அதன் செயற்பணிகளுக்கு வேகமூட்டினார்கள்; விஞ்ஞான கம்யூனிசக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட புதிய ஸ்தாபனத்தை நிறுவுகின்ற பாதையில் அதை வழி நடத்தினார்கள். 1847 ஜூனில் நடைபெற்ற நியாயவாதிகளின் சங்கத்தின் முதல் காங்கிரசில் இச்சங்கம் திருத்தியமைக்கப்பட்டு கம்யூனிஸ்டுகள் சங்கம் என்று புதுப்பெயரிடப்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டுக் கருத்தை வகுத்தளித்த பொழுது ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!'' என்பது இச்சங்கத்தின் குறிக்கோள் வாசகமாயிற்று.

முதல் காங்கிரசுக்குப் பிறகு மார்க்சும் எங்கெல்சும் இச்சங்கத்தை வலுப்படுத்துவதற்கும் பெருந்திரளான உழைக்கும் மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கை அதிகப்படுத்துவதற்கும் பாடுபட்டார்கள். அவர்கள் தம்முடைய நெருங்கிய சகாக்களின் உதவியுடன் பாட்டாளி வர்க்கத்தின் வெகுஜன அரசியல் ஸ்தாபனத்தை அமைப்பதற்குத் தீவிரமாக உழைத்தார்கள். அந்த நோக்கத்துடன் அவர்கள் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் இரகசிய அமைப்புகளின் ஒப்புநோக்கில் குறுகிய எல்லைகளை விரிவுபடுத்துவதற்கு முயன்றார்கள். மார்க்ஸ், எங்கெல்சின் வழிகாட்டுதலின்படி கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்கள் பகிரங்கமான முறை

யில் தொழிலாளர் சங்கங்களையும் தொழிலாளர் கல்விச் சங்கங்களையும் நிறுவினார்கள். அவை நூலகங்களை அமைத்தன, பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய சொற்பொழிவுகள் மற்றும் அரசியல் விவாதங்களை நடத்தின. இத்தகைய பகிரங்கமான தொழிலாளர் சங்கங்களில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்கள் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துகளைப் பரப்பினார்கள். பிற்காலத்தில் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''பகிரங்கமான தொழிலாளர் கழகங்களுக்குப் பின்னாலிருந்து அவற்றுக்கு வழிகாட்டிய சங்கம், அவை பகிரங்கமான பிரசாரத்துக்கு மிகவும் சிறந்த மேடையாகவும் அவற்றின் மிகச் சிறந்த உறுப்பினர்கள் தன் சொந்த அணிகளை நிரப்புவதற்கும் பெருக்குவதற்கும் உரிய சேமிப்பிடமாகவும் இருப்பதைக் கண்டது.''*

மார்க்சும் எங்கெல்சும் அமைத்த ஜெர்மன் தொழிலாளர் கழகம் அத்தகைய பகிரங்கமான தொழிலாளர் சங்கமாக இருந்தது. அதில் ஆரம்பத்தில் 37 உறுப்பினர்கள், பின்னர் சுமார் 100 உறுப்பினர்கள் இருந்தார்கள். கம்யூனிஸ்டுகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அதில் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள்; மார்க்ஸ் அதன் மிகச் சுறுசுறுப்பான உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் தொழிலாளர் கழகத்தில் தம்முடைய

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 17, Moscow, Progress Publishers, 1981, pp. 78—79.

கருத்துகளைப் பரப்பினார்கள். கம்யூனிஸ்டு கள் சங்கத்தின் இரண்டாவது காங்கிரஸ் மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துகளை முழுமை யாக அங்கீகரித்து அறிக்கையின் வடிவத்தில் செயல்திட்டமொன்று தயாரிக்குமாறு அவர் களைக் கேட்டுக் கொண்டது. அக்காங்கிரசி லிருந்து திரும்பிய மார்க்ஸ் ''கூலியுழைப்பும் மூலதனமும்'' என்னும் தலைப்பில் ஜெர்மன் தொழிலாளர் கழகத்தில் உரை நிகழ்த்தினார். பிரான்சில் 1848 பிப்ரவரி புரட்சி நடைபெற்ற தும் இக்கழத்தின் உறுப்பினர்கள் கைது செய் யப்பட்டு பெல்ஜியத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். அதன் விளைவாக பிரஸ்ஸெல்சில் இக்கழகத்தின் செயற்பணிகள் முடிவடைந்தன.

மார்க்ஸ் 1848 பிப்ரவரியில் தன்னுடைய சொற்பொழிவுகளைப் பிரசுரமாக வெளியிடு வதற்குத் தயாரித்தார். ஆனால் மார்ச் மாதத் தின் ஆரம்பத்தில் அவர் கைது செய்யப்பட்டு பெல்ஜியத்திலிருந்து வெளியேற்றப்பட்டபடி யால் அவரால் அப்பிரசுரத்தை வெளியிட இயலவில்லை. மார்க்சும் எங்கெல்சும் 1848 ஏப்ரலில் ஜெர்மனிக்குத் திரும்பிய பிறகு புரட்சிகர ஜனநாயக நாளிதழ் என்ற முறை யில் *Neue Rheinische Zeitung* (''புதிய ரைன் பத் திரிகையை'') தொடங்கிய பொழுது இந்நூல் அதில் முதல் முறையாக வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை பெருந்திரளான மக்கள் மீது தாக்கம் செலுத்துகின்ற வலிமையான கருவி யாக இருக்கும் என்று அவர்கள் கருதியபடி

யால் அதற்கு *Neue Rheinische Zeitung* என்று பெயரிட்டார்கள். அதன் மூலம் மார்க்ஸ் 1842இல் கொலோனிலிருந்து வெளியிட்ட புரட்சிகர ஜனநாயகப் பத்திரிகையான *Rheinische Zeitung* (''ரைன் பத்திரிகையின்'') தொடர்ச்சியே அது என்பதை வலியுறுத்தினார்கள். அக்காலத்தில் *Neue Rheinische Zeitung* ''புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் மிகவும் சிறந்த, விஞ்ச முடியாத பத்திரிகையாக இருந்தது''*; அது தொழிலாளர்களிடம் வன்மையான தாக்கத்தைக் கொண்டிருந்தது. "*Neue Rheinische Zeitung*க்கு முன்னரோ, பின்னரோ எந்த ஜெர்மன் பத்திரிகையும் அதே மாதிரியான சக்தியையும் தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை அல்லது அதைப் போல வெற்றிகரமாகப் பாட்டாளி வர்க்கத்தைக் கிளர்ந்தெழுச் செய்யவில்லை'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.** மார்க்சும் எங்கெல்சும் அக்காலத்திய சம்பவங்களை வரலாற்றுப் பொருள் முதல்வாத நோக்கிலிருந்து விமர்சனம் செய்கின்ற கட்டுரைகளை அதில் எழுதினார்கள்; ஜெர்மானிய மற்றும் ஐரோப்பியப் புரட்சியின் வெவ்வேறு கட்டங்களில் புரட்சிகர சக்திகளின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டினார்கள். ஜெர்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, Moscow, Progress Publishers, 1980, p. 81.

** K. Marx, F. Engels, *Selected Works*, in three volumes, vol. 3, Moscow, Progress Publishers, 1973, p. 172.

மனியிலும் இதர நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம், தொழிலாளர்கள் நிலை, தங்கள் உரிமைகளுக்குஅவர்கள் நடத்துகின்ற போராட்டம் ஆகியவை பற்றி அதில் எழுதப்பட்டது. முதலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலுள்ள இடைவெளி, பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதை முதலாளி வர்க்கம் தீவிரப்படுத்துகின்ற முறைகள், தொழிலாளர் நடவடிக்கைகளை நசுக்குவதற்கு அவர்கள் கடைப்பிடிக்கின்ற குரூரமான முறைகள் ஆகியவற்றை அதில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் எடுத்துக்காட்டின. நாட்டில் பிரஷ்ய முடியாட்சியைப் பற்றி பூர்ஷ்வா எதிர்க்கட்சியினருடைய நிலையை மார்க்சும் எங்கெல்சும் கடுமையாக விமர்சனம் செய்தார்கள், ஜெர்மனியை ஜனநாயக முறையில் ஒன்றுசேர்த்து அங்கே குடியரசை அமைக்க வேண்டும் என்று அறைகூவினார்கள். *Neue Rheinische Zeitung*இல் வெளியான கட்டுரைகள் எறிகுண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளின் விளைவைக் கொண்டிருந்தன என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டார்.

அப்பத்திரிகையின் இடைவிடாத போராட்டம், போர்க்குணம் மற்றும் சர்வதேசிய உணர்ச்சி, பிரஷ்ய அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கையை அம்பலப்படுத்தல் ஆகியவற்றுக்காக அதிகாரிகள் அதன் மீது கடுமையான அடக்குமுறையைப் பிரயோகித்தார்கள். மார்க்ஸ் பிரஷ்யக் குடியுரிமை கோரி மனுச் செய்திருந்தார்; அது மறுக்கப்பட்டது.

பத்திரிகையின் ஆசிரியர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. எங்கெல்சைக் கைது செய்வதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட பொழுது அவர் சில மாத காலம் (1848 அக்டோபர் முதல் 1849 ஜனவரி முடிய) ஜெர்மனியை விட்டு வெளிநாட்டுக்குப் போனார். அரசாங்கத்தின் அடக்குமுறை எவ்வளவு கடுமையாக இருந்தாலும் பத்திரிகை தொடர்ந்து வெளியிடப்பட்டது. அது பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைத் துணிகரமாக ஆதரித்தது, ஜெர்மனியில் பிற்போக்குவாதத்தை எதிர்த்து உறுதியாகப் போராடுமாறு அறைகூவியது, வியன்னாவிலும் பாரிசிலும் எதிர்ப்புரட்சியின் விளைவுகளை எடுத்துக் காட்டியது, ஹங்கேரியிலும் இத்தாலியிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தது. பிற்போக்குவாதம் எங்கும் நிலவிய காலத்தில் *Neue Rheinische Zeitung* மட்டுமே, எங்கெல்சின் வார்த்தைகளில் சொன்னால், ''எல்லா நாடுகளின் முதலாளி வர்க்கமும் குட்டி முதலாளி வர்க்கமும் தோல்வியுற்றவர்கள் மீது அவதூறுகளைப் பொழிந்து கொண்டிருந்த தருணத்தில் நசுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் பதாகையை உயர்த்திப் பிடித்தது''*.

ஜெர்மனியில் எதிர்ப்புரட்சி வேகமடைந்த பொழுது பிரஷ்ய அரசாங்கம் மார்க்சை ''அந்

---

* K. Marx, F. Engels, *Selected Works*, vol. 3, p. 170.

நிய நாட்டுக்காரர்'' என்று அறிவித்து பிரஷ்யா விலிருந்து வெளியேற்றுகின்ற ஆணையை வெளியிட்டது. மார்க்ஸ் மற்றும் ஆசிரியர் குழுவின் இதர உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் பத்திரிகையை வெளியிடுவதற்கு முடியவில்லை. கடைசி இதழ் (எண் 301) சிகப்பு மசியில் அச்சிடப்பட்டு 1849 மே 19இல் வெளியிடப்பட்டது. அக்கடைசி இதழில் மார்க்ஸ் எழுதிய கட்டுரை, அப்பத்திரிகை பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர ஏடாக இருந்தது, பல்வேறு நாடுகளிலும் தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தது, ஜெர்மானிய மக்களின் உண்மையான தேசிய நலன்களை முரணில்லாமல் ஆதரித்தது ஆகியவற்றை சுட்டிக் காட்டியது. ''நாங்கள் நம்முடைய நாட்டின் புரட்சிகர கௌரவத்தைக் காப்பாற்றினோம்'' என்று கடைசி இதழில் எழுதப்பட்டிருந்தது.* கொலோன் தொழிலாளர்களுக்கு என்னும் தலைப்புடைய விடைபெறும் கட்டுரையில் ஆசிரியர்கள் புரட்சி இலட்சியத்தைத் தாங்கள் ஆதரிப்பதை மீண்டும் உறுதிப்படுத்தினார்கள்; ''தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையே எங்கும் எப்பொழுதும் எங்களுடைய கடைசிச் சொல்லாக இருக்கும்!'' என்று அறிவித்தார்கள்.**

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 9, p. 454.

** *Ibid*, p. 467.

மார்க்சின் நூலாகிய கூலியுழைப்பும் மூலதனமும் 1849ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் புரட்சிகர சம்பவங்கள் உச்சத்தில் இருந்த பொழுது *Neue Rheinische Zeitung*இல் பிரசுரிக்கப்பட்டது. ஹங்கேரியில் லாயொஷ் கோஷூத்தின் புரட்சிகர அரசாங்கத்தின் தலைமையில் புரட்சிக்காரர்கள் ஹாப்ஸ்பர்க் அரசமரபினருடைய குரோஷியக் கூலிப் படைகளை எதிர்த்துத் தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்தார்கள். 1849 ஏப்ரல் 14இல் ஹங்கேரியின் முழு சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டது; ஹாப்ஸ்பர்க் அரசர் ஹங்கேரிய அரியணையிலிருந்து விரட்டப்பட்டார். இத்தாலியில் ஜூஸெப்பெ மாஜினி, ஜூஸெப்பெ கரிபால்டி ஆகியோர் தலைமையில் ரோமானியக் குடியரசு அந்நியத் துருப்புகளை விரட்டிக் கொண்டிருந்தது. ஜெர்மனியின் ரைன் பிரதேசத்தில் புரட்சிகர எழுச்சிக்குத் தயாரிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மே 10இல் தொடங்கிய அந்தப் புரட்சிகர எழுச்சியில் எங்கெல்ஸ் பங்கெடுத்தார். ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வெளியிடப்பட்ட ஒவ்வொரு சிறப்பிதழும் நடவடிக்கைக்குத் தயாராகுமாறு தொழிலாளர்களை அறைகூவியது; அந்த சமயத்தில் மார்க்சின் கூலியுழைப்பும் மூலதனமும் வெளியிடப்பட்டது தற்செயலானதல்ல. அப்பத்திரிகையில் கூலியுழைப்பு, மூலதனம் ஆகியவற்றைப் பற்றிய நூல் பிரசுரிக்கப்பட்டது ‘‘எங்களுடைய கொள்கையின் சமூக இலட்சியத்தைத் தெளி

வாக எடுத்துக்காட்டும்'' என்று மார்க்சும் *Neue Rheinische Zeitung*உம் (1848—1849) என்னும் கட்டுரையில் எங்கெல்ஸ் எழுதினார்.* புரட்சிகரப் போராட்டம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த சூழலில் முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்கும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படுதலுக்கும் அடிப்படையாகவுள்ள பொருளாதார உறவுகளை விளக்குவது அவசியம் என்று மார்க்ஸ் கருதினார். அந்த உறவுகளை வெளியே கொண்டுவருவது மிகவும் முக்கியம்; ஏனென்றால் அவை வர்க்கப் போராட்டத்தின் பொருளாயத அடிப்படையாக இருக்கின்றன. மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படையான உற்பத்தி உறவுகளை, கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள உறவுகளைத் தொழிலாளர்கள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் விளக்கினார்.

**கூலியுழைப்பும் மூலதனமும்** நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கிறது என்று மார்க்ஸ் முன்னுரையில் கூறினார்: 1) கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்குமுள்ள உறவு; 2) நடுத்தர முதலாளி வர்க்கங்களும் விவசாயிக் குலத்தோர் எனப்படுவோரும் தவிர்க்க முடியாதபடி. அழிதல்; 3) அக்காலத்தில் உலகச் சந்தையில் கொடுங்கோலனாகக் கோலோச்சும் இங்கிலாந்தினால் பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் முதலாளி வர்க்கங்கள் வர்த்

* K. Marx, F. Engels, *Selected Works*, vl.o 3, p. 171.

தக ரீதியில் கீழ்ப்படுத்தப்படுதலும் சுரண்டப் படுதலும். எனினும் அதிகாரிகளின் அடக்கு முறையின் விளைவாக மார்க்ஸ் கொலோனை விட்டுத் தற்காலிகமாக வெளியேற வேண்டி யிருந்ததாலும் பிற்காலத்தில் *Neue Rheinische Zeitung* நசுக்கப்பட்டதாலும் அந்த நூல் பூர்த் தியடையவில்லை. மார்க்ஸ் கூலி உழைப்புக் கும் மூலதனத்துக்கும் உள்ள உறவை, தொழி லாளியின் அடிமைநிலை மற்றும் முதலாளி யின் ஆதிக்கத்தைப் பற்றிய முதல் பிரிவை மட்டுமே எழுத முடிந்தது.

கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்கும் உள்ள உறவுகள் ஐந்து கட்டுரைகளில் விளக் கப்படுகின்றன; ஒவ்வொரு கட்டுரையிலும் குறிப்பிட்ட ஒரு பிரச்சினை ஆராயப்படுகிறது. 1849 ஏப்ரல் 4இல் பிரசுரிக்கப்பட்ட முதல் கட்டுரை கூலிப் பிரச்சினையை ஆராய்கிறது. இரண்டாவது கட்டுரை (ஏப்ரல் 5) தொழி லாளர்களின் கூலி எப்படி நிர்ணயிக்கப்படு கிறது என்பதை விளக்குகிறது. மூன்றாவது கட்டுரையில் (ஏப்ரல் 6) மார்க்ஸ் உற்பத்தி உறவு என்ற அடிப்படையில் மூலதனத்தைப் பகுப்பாய்வு செய்கிறார். நான்காவது கட்டுரை (ஏப்ரல் 7) உற்பத்தி மூலதனத்தின் வளர்ச்சி யை ஆராய்கிறது. ஐந்தாவது மற்றும் கடைசிக் கட்டுரை (ஏப்ரல் 10) உற்பத்தி மூல தனத்தின் வளர்ச்சி தொழிலாளி வர்க்கத்தின் நிலையை எப்படி பாதிக்கிறது என்பதை ஆராய்கிறது.

கூலியுழைப்பும் மூலதனமும் தனிப் பிரசுரமாக 1880இல் பிரெஸ்லாவில் வெளியிடப்பட்டது; ஆனால் அதன் தயாரிப்பில் மார்க்ஸ் பங்கெடுக்கவில்லை. அதன் இரண்டாவது பதிப்பு அதே நகரத்தில் 1881இல் வெளியிடப்பட்டது. மார்க்ஸ் மரணமடைந்த பிறகு, 1884இல் எங்கெல்சின் உதவியுடன் மற்றொரு பதிப்பு ஹோட்டிங்கென்—ஸூரிச்சில் ஸ்விஸ் கூட்டுறவு அச்சகத்தினரால் வெளியிடப்பட்டது. 1891இல் எங்கெல்ஸ் தொழிலாளர் மத்தியில் அதைப் பரப்புவதற்காக 10,000 பிரதிகளை பெர்லினில் வெளியிட்டார். பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி மார்க்ஸ் பிற்காலத்தில் செய்த முடிவுகளுடன் பொருந்த வேண்டும் என்பதற்காக எங்கெல்ஸ் அப்பதிப்பில் சில திருத்தங்களைச் செய்தார். 1891ஆம் ஆண்டுப் பதிப்பின் முன்னுரையில் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''என்னுடைய மாற்றங்கள் ஒரேயொரு விவகாரம் பற்றியவை. மூலத்தின்படி தொழிலாளர் தமது உழைப்பைக் கூலிக்காக முதலாளியிடம் விற்கிறார். ஆனால் இங்குள்ள வாசகத்தின்படி அவர் தமது உழைப்புச் சக்தியை விற்கின்றார்.''* எங்கெல்ஸ் இத்திருத்தங்களைச் செய்வதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. ஏனென்றால் மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் என்னும் நூலில் கூட

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 9.

உழைப்பு விற்பனை என்பதைத் தொழிலாளியின் வாழ்க்கை நடவடிக்கையின், அவனுடைய உழைப்புத் தகுதியின் விற்பனையாகவே பார்த்தார். இந்நூலில் மார்க்ஸ் உழைப்பின் மதிப்பையும் உழைப்பினால் படைக்கப்பட்ட மதிப்பையும் வேறுபடுத்திக் காட்டினார். முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளியின் வாழ்க்கை நடவடிக்கை, அவனுடைய உழைப்புத் தகுதி எப்படி ஒரு பண்டமாக மாற்றமடைகிறது என்பதையும் அவர் தெளிவாக எடுத்துக்காட்டினார். எனவே மார்க்ஸ் **கூலியுழைப்பும் மூலதனமும்** நூலில் உழைப்புக்கும் உழைப்புச் சக்திக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை. உருவரையாகக் காட்டியதாகவே கொள்ள வேண்டும். ஆகவே இப்பிரசுரத்தில் மார்க்சின் நூலின் வாசகத்தின்படி ''உழைப்பு'' என்னும் சொல் ''உழைப்புச் சக்தியைக்'' குறிப்பிடுகின்ற இடங்களில் இக்காரணத்தினால் ''உழைப்பு'' என்ற சொல்லை அடுத்து ''உழைப்புச் சக்தி'' என்னும் சொல்லை அடைப்புக் குறிகளுக்குள் உபயோகித்திருக்கிறோம்.

**கூலியுழைப்பும் மூலதனமும்** நூல் பூர்த்தியடையாத நிலையில் இருக்கிறது. அது 1847 டிசம்பரில் பிரஸ்ஸெல்சில் எழுதப்பட்ட கூலி என்னும் கையெழுத்துப் பிரதியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்பிரதி ஜெர்மனியின் சமூக-ஜனநாயக இயக்கத்தின் பழஞ்சுவடிகளில் பாதுகாக்கப்பட்டிருந்தது. அது 1924இல்

முதல் தடவையாக சோஷலிஸ்ட் பொருளாதாரம் என்னும் பத்திரிகையில் ருஷ்ய மொழியிலும் (1925இல் *Unter dem Banner des Marxismus* ''மார்க்சியப் பதாகையின் கீழ்'') என்னும் பத்திரிகையில் ஜெர்மன் மொழியிலும் பிரசுரிக்கப் பட்டது. கூலி என்னும் நூல் மார்க்ஸ் ஜெர்மானியத் தொழிலாளர்கள் மத்தியில் தொடர் வரிசையாக நிகழ்த்திய சொற்பொழிவுகளின் பூர்வாங்க நகலாகும்.

மார்க்சின் கூலியுழைப்பும் மூலதனமும் விஞ்ஞானக் கம்யூனிசக் கருத்துகளின் பிரசாரத்தில் தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அதன் முதல் வெளியீட்டைத் தொழிலாளர்கள் அதிகமான உற்சாகத்துடன் வரவேற்றார்கள். கொலோன் தொழிலாளர் சங்கக் கமிட்டி தன்னுடைய கிளைகள் கூலியுழைப்பையும் மூலதனத்தையும் பற்றி மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளின் அடிப்படையில் சமூக விவகாரங்களை விவாதிக்க வேண்டும் என்று 1849 ஏப்ரல் 11இல் முடிவு செய்தது. இக்கட்டுரைகள் ஜெர்மனியில் எல்லாத் தொழிலாளர் சங்கங்களிலும் விவாதிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டது.

பிற்காலத்தில் கூலியுழைப்பும் மூலதனமும் பல்வேறு நாடுகளில் அதிக எண்ணிக்கையில் வெளியிடப்பட்டது. மெய்யான புரட்சித் தத்துவம் என்ற முறையில் மார்க்சியத்தின் வளர்ச்சியில் முக்கியத்துவம் நிறைந்த கட்டத்தை அது குறித்தது.

## கூலியும் உழைப்புச் சக்தியும்

மார்க்ஸ் தன்னுடைய சகாவான எங்கெல்சுடன் கூட்டாக வரலாற்றைப் பற்றிய இயக்கவியல் பொருள்முதல்வாதக் கருதுகோளை விரித்துரைத்தார். அதனடிப்படையில் பொருளாதார வகையினங்களை அவற்றிற்குரிய உற்பத்தி முறையின் பிரத்யேகத் தன்மையைப் பிரதிபலிக்கின்ற வரலாற்று வகையினங்களாகக் கருதிப் பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்று மார்க்ஸ் 1840க்களிலேயே முடிவு செய்தார். ஆகவே கூலி என்னும் கருத்து மற்றும் சாராம்சத்தைப் பற்றி அவர் எழுதிய முதல் கட்டுரையிலேயே இவற்றை குணாம்ச ரீதியாகப் பார்க்கிறார். அவர் முதலாளித்துவ உற்பத்தி முறையின் பிரத்யேக நிலைமைகளில் கூலி என்னும் வகையினம் வெளியிடுகின்ற உறவுகளை ஆராய்கிறார்.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது கூலி என்பது முதலாளி ஒரு தொழிலாளிக்கு, அவர் குறிப்பிட்ட நேரம் வேலை செய்ததற்கு அல்லது குறிப்பிட்ட வேலையை நிறைவேற்றியதற்குக் கொடுக்கின்ற பணம் என்று தோன்றுகிறது. ஆகவே கூலி பிரதானமாக முதலாளி தொழிலாளியின் உழைப்பை (உழைப்புச்

சக்தியை) விலைக்கு வாங்குகிறார் என்பதைக் குறிக்கிறது. முதலாளி ஜீனி அல்லது ஏதாவதொரு பண்டத்தைப் பணம் கொடுத்து வாங்குவதைப் போல, தொழிலாளியின் உழைப்பை (உழைப்புச் சக்தியை) வாங்குகிறார். வேறு விதமாகச் சொல்வதென்றால், தொழிலாளியின் உழைப்பு (உழைப்புச் சக்தி) மற்ற எல்லாப் பண்டங்களையும் போல ஒரு பண்டமாக இருக்கிறது. மற்ற பண்டங்களைப் போல அதைத் திட்டவட்டமான விகிதத்துக்குப் பரிவர்த்தனை செய்ய முடியும். ஒரு நெசவாளி 12 மணி நேர உழைப்புக்கு 2 மார்க் கூலி பெற்று, அந்த 2 மார்க்குகளை உணவு, உடை மற்றும் இதர நுகர்வுப் பொருட்களுக்குச் செலவிடுகிறார் என்றால் அந்த 2 மார்க்குகள் அவருடைய உழைப்பு (உழைப்புச் சக்தி) மற்ற பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகின்ற விகிதத்தை அல்லது அவருடைய உழைப்பின் (உழைப்புச் சக்தியின்) பரிவர்த்தனை மதிப்பை வெளியிடுகின்றன என்று மார்க்ஸ் கூறுகிறார். பணத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு விலை எனப்படுகிறது; உழைப்பின் (உழைப்புச் சக்தியின்) விலைக்குத் தரப்படுகின்ற விசேஷமான பெயர்தான் கூலி. ஆனால் கூலி வெவ்வேறு விதமான உறவுகளைக் கொண்டிருக்கிறது என்று மார்க்ஸ் வலியுறுத்துகிறார். முதலாளித்துவ அமைப்பில் உழைப்பின் சாராம்சத்தைப் பகுப்பாய்வு செய்கின்ற பொழுது

அவர் அந்த உறவுகளின் உள்ளடக்கத்தை முரணில்லாமல் வெளிக்காட்டுகிறார்.

முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளி உழைப்பிலிருந்து அந்நியமாகிவிடுகிறார் என்று மார்க்ஸ் நிரூபிக்கிறார். தொழிலாளியின் வாழ்க்கை நடவடிக்கை, அவருடைய சொந்த வாழ்க்கையின் வெளியீடான உழைப்பு அவருக்குச் சொந்தமானதல்ல. ''உழைப்பை அவர் தமது வாழ்வின் ஒரு பகுதியாகக் கூட கருதுவதில்லை, வாழ்வின் தியாகமாகவே கொள்ள வேண்டியிருக்கிறது.''* தொழிலாளியின் வாழ்க்கையின் வெளியீடான உழைப்பு கூட அவருக்குச் சொந்தமாக இல்லாதிருப்பதால் அவருடைய உழைப்பின் பலன் அவருடைய குறிக்கோள் அல்ல. அவர் பட்டுத் துணி நெய்வதில், சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டியெடுப்பதில் அல்லது அரண்மனையைக் கட்டுவதில் நாள்தோறும் 12 மணி நேரம் உழைக்கிறார்; ஆனால் அவர் தனக்காக இவற்றைச் செய்யவில்லை. ஆகவே அவர் 12 மணி நேர நெசவை, சுரங்க உழைப்பை, கட்டிட வேலையைத் தன்னுடைய வாழ்க்கையின் வெளியீடு அல்லது குறிக்கோளாகக் கருதுவதில்லை. உழைப்பு முடிவடைந்த பிறகுதான் அவருடைய வாழ்க்கை ஆரம்பமாகிறது.

அவருடைய 12 மணி நேர உழைப்பு நெசவு,

* அதே நூல், பக்கம் 29.

சுரங்க உழைப்பு, கட்டிட வேலை, இதரவை என்ற முறையில் அவருக்கு எவ்விதமான அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை; ஆனால் கூலி பெறக் கூடிய வழி என்ற முறையில் அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. உற்பத்திப் பொருள் அவருடைய உழைப்பின் குறிக்கோள் அல்ல, திட்டவட்டமான அளவைக் கொண்ட வாழ்க்கைச் சாதனங்களின் பருவடிவம் என்ற முறையில் கூலியே அவருடைய குறிக்கோளாகும். ஆனால் அவற்றைப் பெறுவதற்குத் தொழிலாளி தான் வாழ்வதற்கு உதவுகின்ற வாழ்க்கை நடவடிக்கையை விற்பனை செய்யுமாறு நேர்கிறது. முதலாளித்துவ சமூகத்தில் உழைப்பு தொழிலாளியிடமிருந்து அந்நியமானது, அவன் அதை நுகர்வு செய்ய முடியாது என்பதை ஆராய்ந்த பொழுது மார்க்ஸ் உழைப்பின் பயன் மதிப்புக்கும் தொழிலாளியினால் விற்பனை செய்யப்படுகின்ற பண்டம் என்ற முறையில் அதன் மதிப்புக்கும் இடையில் வேறுபாட்டைக் காண்கின்ற வழியில் முன்னேறினார். அப்பண்டத்தின் பயன் மதிப்பு உழைப்பின் உற்பத்திப் பொருளால் வெளியிடப்படுகிறதென்றால், அதன் மதிப்பைக் கூலி வெளியிடுகிறது. மார்க்ஸ் பிற்காலத்தில் எழுதிய நூல்கள் இக்கருதுகோளைத் தனிப்பிரித்து வளர்த்துக் கூறுகின்றன. தொழிலாளியினால் விற்பனை செய்யப்படுகின்ற பண்டத்தின் பயன் மதிப்புக்கும் மதிப்புக்கும் இடையில் வேறுபாடு இருப்பது மார்க்சின் ஆரம்ப கால இந்நூலில் பொதுப்

படையாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது என்பது முக்கியமான அம்சமாகும்.

[illegible] உழைப்பின் சாராம்சத்தை ஆராய்கின்ற பொழுது உழைப்பு (உழைப்புச் சக்தி) எல்லாக் காலத்திலும் ஒரு பண்டமாக இருக்கவில்லை, முதலாளித்துவ சமூகத்தில் மட்டுமே அது பண்டமாக இருக்கிறது என்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். அவர் ஒரு கொத்தடிமை, பண்ணையடிமை மற்றும் கூலித் தொழிலாளியின் உழைப்பிலுள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டுகிறார்.

அடிமை உடைமைச் சமூகத்தில் கொத்தடிமை தன்னுடைய உழைப்பை ஒரு பண்டமாக விற்பனை செய்ய முடியாது; ஏனென்றால் அவர் ஒரு பண்டத்தைப் போல விலைக்கு வாங்கப்பட்டார், விற்பனை செய்யப்பட்டார். நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பண்ணையடிமை தன்னுடைய உழைப்பின் ஒரு பகுதியை மட்டுமே விற்பனை செய்கிறார்; நிலத்தின் உடைமையாளர் அவரிடமிருந்து லாபத்தைப் பெற்றார். ஆகவே அடிமை உடைமை மற்றும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளில் அடிமை உடைமையாளருக்குக் கொத்தடிமை மீதிருந்த முழு உடைமையும் நிலப்பிரபுவுக்குத் தன்னுடைய பண்ணையடிமை மீதிருந்த பகுதியுடைமையும் அவர்கள் உழைத்தே ஆக வேண்டும் என்னும் பொருளாதாரத்துக்கு அப்பாற்பட்ட நேரடியான நிர்ப்பந்தத்தின் மூலமாக அவர்களைச் சுரண்டுவதற்குரிய முன்நிபந்தனை

களாக இருந்தன. முதலாளித்துவ உற்பத்தி முறையிலோ தொழிலாளியின் உழைப்பு கூலியுழைப்பாக, பண்டமாக மாறுகிறது. ''சுதந்திர உழைப்பாளி இவ்வாறன்றி, தன்னை விற்பனை செய்து கொள்கிறான்; ஆம், சிறுகச் சிறுக விற்பனை செய்து கொள்கிறான். நாள்தோறும் தன் வாழ்வில் எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினைந்து மணி நேரத்தை அதிக விலை தருகிறவனுக்கு, மூலப் பொருள்களுக்கும் உழைப்புக் கருவிகளுக்கும் பிழைப்புச் சாதனங்களுக்கும் உடைமையாளனாய் இருப்பவனுக்கு, அதாவது முதலாளிக்கு விற்பனை செய்து கொள்கிறான்.''* முதலாளித்துவத்தின் சமூக பொருளாதார நிலைமைகள் தொழிலாளி தன்னுடைய வாழ்க்கை நடவடிக்கையை விற்பனை செய்யுமாறு கட்டாயப்படுத்துகின்றன.

தொழிலாளியின் வாழ்க்கை நடவடிக்கை எத்தகைய நிலைமைகளில் பண்டமாக மாறுகிறது என்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். முதலாளித்துவ அமைப்பில் கூலித் தொழிலாளி சுதந்திரமானவராக இருப்பது முக்கியமான நிபந்தனையாகும். அவர் உழைப்புக் கருவிகள் மற்றும் வாழ்க்கைச் சாதனங்களின் உடைமையாளருக்குச் சொந்தமானவர் அல்ல; நிலத்தின் உடைமையாளருக்கும் அவர் சொந்தமானவரல்ல. அவர் தன்னுடைய வாழ்க்கை நடவடிக்கைக்குத் தானே உடைமையாளராக

---

* அதே நூல், பக்கம் 31.

இருக்கிறார். அவர் தன்னுடைய வாழ்க்கை நடவடிக்கையைச் சிறுகச் சிறுக, குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் விற்பனை செய்கிறார், நிரந்தரமாக விற்பனை செய்யவில்லை. கூலித் தொழிலாளி அந்தப் பண்டத்தை எந்த முதலாளியிடமும் விற்பனை செய்வதற்கு சுதந்திரம் பெற்றிருக்கிறார். அவர் விரும்பினால் ஒரு முதலாளியிடமிருந்து விலகிக் கொள்ள முடியும்; தன்னுடைய வாழ்க்கை நடவடிக்கையை மற்றொரு முதலாளியிடம் விற்பனை செய்ய முடியும்.

கூலித் தொழிலாளியிடம் உற்பத்திச் சாதனங்கள் இல்லை, வாழ்க்கைச் சாதனங்களும் இல்லை. தன்னுடைய வாழ்க்கை நடவடிக்கையை விற்பனை செய்வதன் மூலமாக மட்டுமே அவர் வாழ முடியும். தொழிலாளி வாழ்வதற்காகத் தன்னுடைய ஒரே உடைமையை, உழைப்புத் தகுதியை விற்பனை செய்கிறார்; ஏனென்றால் அவரிடம் எவ்விதமான உற்பத்திச் சாதனங்களும் இல்லை. ஆகவே தொழிலாளி, உழைப்புத் தகுதியைக் கொண்டிருக்கின்ற நபர் தன்னுடைய சுதந்திரமான பொருளாதார நடவடிக்கையைச் செய்வதற்கு வழியில்லாமல் இருக்கிறார், அதாவது அவரிடம் எவ்வித உற்பத்திச் சாதனங்களும் இல்லை. இது முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளியின் உழைப்பு நடவடிக்கையைப் பண்டமாக மாற்றுகின்ற இரண்டாவது வரலாற்று நிபந்தனையாகும்.

மார்க்ஸ் முதலாளித்துவ உற்பத்தி முறையின் இன்றியமையாத அம்சத்தைத் தனியாகப் பிரித்துக்காட்டினார். உழைப்பு கூலி உழைப்பாக மாற்றப்படுதல் அந்த அம்சமாகும். முதலாளித்துவத்தை அமைப்பு என்ற முறையில் அடிமை முறை, நிலப்பிரபுத்துவம் மற்றும் அவற்றுக்கு முந்திய சமூக உற்பத்தி வடிவங்கள் அனைத்திலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுவது இந்த அம்சமே. அது அதிகமான முக்கியத்துவமடைந்து முதலாளித்துவ அமைப்பிலுள்ள இதர பொருளாதார நிகழ்வுப் போக்குகள் அனைத்தையும் நிர்ணயிக்கிறது.

தொழிலாளியிடம் எவ்விதமான உற்பத்திச் சாதனங்களும் இல்லை, ஆகவே கூலி உழைப்பு மூலதனத்துக்குக் கீழ்ப்படுத்தப்படுகிறது என்னும் உண்மை உற்பத்திச் சாதனங்களின் பால் கூலித் தொழிலாளியின் உறவின் குணாம்சம் என்பதை மார்க்ஸ் தொடர்ந்து விளக்குகிறார். இப்படிக் கீழ்ப்படுதல் இல்லாவிட்டால் தொழிலாளி தன்னுடைய வாழ்க்கை நடவடிக்கையை, தன்னுடைய உழைப்பைப் பயன்படுத்த முடியாது, ஆகவே எவ்விதமான வாழ்க்கைச் சாதனங்களையும் பெற முடியாது. ''ஆனால் தமது உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதே பிழைப்புக்கான ஒரே ஆதாரமாய்க் கொண்டிருக்கும் தொழிலாளியால், தமது பிழைப்பைத் துறந்து கொண்டுவிடாமல், வாங்குவோரின் முழு வர்க்கத்திடமிருந்தும், அதாவது முதலாளி வர்க்கத்திடமிருந்து விலகி வந்து விட

முடியாது. தொழிலாளி உரித்தாகியிருப்பது முதலாளி வர்க்கத்துக்கே, இந்த அல்லது அந்த முதலாளிக்கல்ல'' என்று மார்க்ஸ் எழுதுகிறார்.* கூலித் தொழிலாளி பொருளாதாரக் கீழ்ப்படுதல் என்னும் கயிறுகளால் மொத்த முதலாளி வர்க்கத்துடனும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறார் என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார். உழைப்பதற்கான பொருளாதார நிர்ப்பந்தம் கூலித் தொழிலாளியின் வாழ்க்கை நடவடிக்கையை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் என்னும் உறவுகளினால் நயப்படுத்தப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் முதலாளித்துவத்தின் கீழ் உழைப்பு கூலி அடிமை முறையாக இருக்கிறது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் நீடிக்கின்ற வரை தொழிலாளர்கள் கூலி அடிமைகளாகவே இருப்பார்கள்.

ஆகவே மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் எழுதியுள்ள முதல் கட்டுரையில் முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளர்களுடைய உழைப்பின் அர்த்தத்தைத் தொழிலாளர்களுக்கு எடுத்துக்காட்டுகிறார். அவர்களுடைய வாழ்க்கை நடவடிக்கை ஒரு பொருளாகக் கருதப்படுகிறது, அந்த முறையில் விற்பனை செய்யப்படுகிறது என்பது அதன் அர்த்தமாகும். முதலாளித்துவத்தில் சுதந்திரமான தொழிலாளர்கள் என்று சொல்லப்படுபவர்

* அதே நூல், பக்கங்கள் 31—32.

களுடைய உழைப்பு விசேஷமான, பொருளா தார நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தப்படுகிறது; முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழிப்ப தன் மூலமாக மட்டுமே அவர்கள் அதிலிருந்து தப்ப முடியும். இவ்விதமே 1848 புரட்சியின் முற்பொழுதில் தொழிலாளர்கள் மத்தியில் மார்க்ஸ் நிகழ்த்திய உரைகளும் ஐரோப்பா வில் புரட்சிகரமான சம்பவங்கள் நடை பெற்றுக் கொண்டிருந்த பொழுது அவர் எழு திய கட்டுரைகளும் முதலாளித்துவ ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராட வேண்டிய பொருளாதார அவசியத்தைத் தொழிலாளர் களுக்கு விளக்கின.

முதல் கட்டுரையில் மார்க்சின் பொருளா தாரத் தத்துவத்தின் அடிப்படையான அம்சங் கள் ஏற்கெனவே இடம் பெற்றிருக்கின்றன. இவை பிற்காலத்தில் மூலதனம் நூலின் பூர் வாங்க நகலிலும் மூலதனம் நூலிலும் மேலும் விரிவான முறையில் கூறப்பட்டுள்ளன; அது மார்க்ஸ் விஞ்ஞான கம்யூனிசத்தைப் பொரு ளாதார அடிப்படையில் நிறுவுவதற்கு உதவி யது. முதலாளித்துவ அமைப்பில் உழைப்பு கூலி உழைப்பாக மாறுதல், கொத்தடிமை மற்றும் பண்ணையடிமைக்கும் கூலித் தொழி லாளிக்கும் உள்ள வேறுபாடு, தொழிலாளி யின் வாழ்க்கை நடவடிக்கை பண்டமாக மாறு கின்ற நிலைமைகள் ஆகிய தத்துவக் கருது கோள்களை மார்க்ஸ் தன்னுடைய பொருளா தாரக் கையேடுகள் (1857—1858 மற்றும்

1861—1863) மற்றும் மூலதனம் நூலில் விரிவாக விளக்கினார். உழைப்புச் சக்தி ஒரு பண்டம் என்னும் மார்க்சின் தத்துவத்துக்கும் உபரி மதிப்பைப் பற்றிய கோட்பாட்டுக்கும் அது இன்றியமையாத முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது.

1857—1858ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட *Grundrisse der Kritik der politischen Ökonomie* என்னும் கையெழுத்துப் பிரதி மூலதனம் நூலின் முதல் நகலாகும். அதில் மார்க்ஸ் ஆடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோவின் பொருளாதாரத் தத்துவத்தின் வரையறைகளுக்கு அப்பால் சென்றார். அவர் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை உருவாக்கினார். பண்டத்தை உற்பத்தி செய்கின்ற உழைப்பின் இரட்டைத் தன்மையைப் பற்றிய கருதுகோள் அதன் முக்கியமான அம்சமாகும். உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உற்பத்தி உறவை உழைப்பின் இரட்டைத் தன்மையின் ஒளியில் ஆராய்ந்து, கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் தொழிலாளி கூலித் தொழிலாளியாக மாறுகின்ற நிலைமைகளைப் பற்றியும் முதலாளியுடன் பொருளாதார உறவில் ஈடுபடுவதற்கு அவருக்குள்ள சுதந்திரத்தைப் பற்றியும் 1840க்களின் பிற்பாதியில் தான் வெளியிட்ட கருத்துகளை மார்க்ஸ் ஆழப்படுத்தினார்.

தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையில் நடைபெறுகின்ற பரிவர்த்தனையைக் குண

ரீதியில் புதிய தத்துவ மட்டத்தில் ஆராய்ந்து, பரிவர்த்தனை நடவடிக்கையின் வடிவமும் உள்ளடக்கமும் தொழிலாளியின் திட்டவட்டமான சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் பற்றியிருப்பதைக் குறிக்கிறது என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டினார். பண்டப் பரிவர்த்தனையின் பொருளாதார வடிவம் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இடையில் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு சமத்துவமான ஒன்று இருப்பதைச் சுட்டுகிறது. தொழிலாளி தன்னுடைய பண்டத்தின் பயன் மதிப்பைத் தனக்கு அவசியமான ஒரு பயன் மதிப்புக்குப் பரிவர்த்தனை செய்வதால் அவர் பண்டங்களைப் பரிவர்த்தனை செய்கின்ற மற்ற நபர்களைப் போல தரப்பாளராக இருக்கிறார். ஆகவே பண்டங்களைப் பரிவர்த்தனை செய்கின்ற எந்த நபரையும் போல தன்னுடைய பண்டத்தைப் பரிவர்த்தனை செய்கின்ற தரப்பாளருடன் அதே உறவில் இருக்கிறார். ''தரப்பாளர் ஒவ்வொருவரும்பரிவர்த்தனையாளரே, அதாவது மற்றவர் தம்மிடம் எந்த சமூக உறவைக் கொண்டிருக்கிறாரோ அதே உறவை அவர் மற்றவரிடம் கொண்டிருக்கிறார். பரிவர்த்தனை செய்து கொள்கின்ற நபர்கள் என்ற முறையில் அவர்களுடைய உறவு சமத்துவமானது'' என்று மார்க்ஸ் எழுதினார்.* அவர்கள் பரிவர்த்

* K. Marx, F. Fngels, *Gesamtausgabe*, II/1.1, Berlin, Dietz Verlag, S. 165.

தனை செய்கின்ற பொருட்கள் கறாரான சம மதிப்பைக் கொண்டிருக்க முடியும், கொண்டிருக்க வேண்டும் என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார். பரிவர்த்தனை செய்யப்படுகின்ற பயன் மதிப்புகளின் சமத்தன்மை பரிவர்த்தனை செய்யப்படுகின்ற சம பொருட்களின் உடைமையாளர்களின் சமத்துவத்தை உள்ளடக்கியிருக்கிறது. பரிவர்த்தனை நடவடிக்கையின் போது உடைமையாளர்களுக்கு இடையில் ''சமூக சமத்துவம்''* ஏற்படுகிறது. பரிவர்த்தனை செய்கின்ற ஒவ்வொரு தரப்பாளரும் அடுத்தவருக்கு அவசியமான பயன் மதிப்பின் உடைமையாளராக இருக்கிறார்; அவர்கள் பயன் மதிப்புகளைப் பரிவர்த்தனை செய்வதன் மூலம் சமூக உறவில் ஈடுபடுகிறார்கள். சம்பந்தப்பட்ட நபர்களின் தேவைகள் வேறுபடுகின்றன; துல்லியமாக இந்த வேறுபாடுதான் பரிவர்த்தனைக்கும் ஒருவருக்கொருவர் சமூக சமத்துவத்துக்கும் உரிய களத்தை அமைக்கிறது; அந்த வேறுபாடு இல்லையென்றால் அவர்களுக்கு இடையில் சமூக வேறுபாடு கிடையாது, இயற்கையான வேறுபாடு மட்டுமே இருக்கும் என்று மார்க்ஸ் கூறுகிறார். ஆகவே தனக்கு அவசியமான பயன் மதிப்புகளுக்காகத் தன்னுடைய பண்டத்தைப் பரிவர்த்தனை செய்கின்ற தொழிலாளி முதலாளியுடன் சமத்துவமான உறவைக் கொண்டிருக்

* *Ibid.*, S. 116.

கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர் பரிவர்த்தனை செய்து சம மதிப்பைப் பெறுகிறார். முதலாளியுடன் செய்கின்ற பரிவர்த்தனையில் தொழிலாளியின் சமத்துவத்தை இந்த ஒரே அர்த்தத்தில் மட்டும்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

பரிவர்த்தனை செய்கின்ற இரு தரப்பினரும் சுதந்திரமானவர்களாக இருக்க வேண்டிய அவசியம் பரிவர்த்தனை நடவடிக்கையின் உள்ளடக்கத்திலிருந்து (அதன் சாரம் பயன் மதிப்புகளின் பரிவர்த்தனையே) எப்படித் தோன்றுகிறது என்பதை மார்க்ஸ் தொடர்ந்து விளக்குகிறார். ஒருவருக்கு குறிப்பிட்ட பயன் மதிப்பு தேவைப்படுகின்ற பொழுது அவர் மற்றொரு நபரிடம் இருக்கின்ற அப்பண்டத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றுவதில்லை; ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தன்னிடமிருக்கின்ற பண்டத்தைச் சுதந்திரமான முடிவுப்படி விற்பனை செய்கிறார்கள், பரிவர்த்தனை செய்கிறார்கள். ''இப்படி பொருளாதார வடிவம், பரிவர்த்தனை ஒவ்வொரு அம்சத்திலும் தரப்பாளர்களின் சமத்துவத்தை முன்வைக்கிறதென்றால் அவர்களைப் பரிவர்த்தனை செய்யத் தூண்டுகின்ற உள்ளடக்கம், பொருளாயதக் கூறு—தனிநபர், புறநிலை ஆகிய இரண்டுமே —சுதந்திரத்தை முன்வைக்கிறது. ஆகவே பரிவர்த்தனை மதிப்பை அடிப்படையாகக் கொண்ட பரிவர்த்தனையில் சமத்துவமும் சுதந்திரமும் மதிக்கப்படுதல் மட்டுமன்றி, பரி

வர்த்தனை மதிப்புகளின் பரிவர்த்தனையே எல்லா சமத்துவத்துக்கும் சுதந்திரத்துக்கும் மெய் யான ஆக்க அடிப்படையாக இருக்கிறது'' என்று மார்க்ஸ் முடிவு செய்தார்.*

சமத்துவமும் சுதந்திரமும் அந்த அர்த்தத் தில் முதலாளித்துவ சமூகத்தில் மட்டுமே வளர்ச்சியடைகின்றன என்பதை மார்க்ஸ் விளக்குகிறார். அடிமை உடைமைச் சமூகத் தில் கொத்தடிமை ஒரு தனிநபருடைய உடை மையாக, தானே ஒரு மதிப்பாக இருக்கிறான். அவன் தன்னுடைய உழைப்புச் சக்தியின் வெளி யீட்டை அல்லது தன்னுடைய வாழ்க்கை நட வடிக்கையைப் பரிவர்த்தனை செய்யப்படு கின்ற பயன் மதிப்பை உடைமையாகக் கொண் டிருப்பவன் என்று கருதக் கூடாது. அவன் தானே பரிவர்த்தனையில் ஈடுபட முடியாது அல்லது பரிவர்த்தனை செய்கின்ற ஒரு தரப்பு நபராக இருக்க முடியாது. அவனுடையஉழைப்பு நேரடியான நிர்ப்பந்தத்தின் மூலம் உழைப்பாக இருக்கிறது. நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பண் ணையடிமை நிலத்துடன் இணைக்கப்பட்ட வனாக இருக்கிறார். அவனுடைய உழைப்பு ஏற்கெனவே அவனுக்கு அந்நியமாகிவிட்டது. ஆனால் அது இன்னும் மதிப்பை மட்டும் உற் பத்தி செய்யவில்லை. பண்ணையடிமையின் உழைப்புச் சக்தி இன்னும் அவனுடைய உடை

* *Ibid.*, S. 168.

மை ஆகவில்லை. அவன் பரிவர்த்தனையில் ஒரு தரப்பாளராகவும் செயலாற்றவில்லை. முதலாளித்துவ சமூகத்தில் உயிருடைய உழைப்புச் சக்தி தொழிலாளியின் உடைமையாக இருக்கிறது; ஆனால் அவர் பரிவர்த்தனை நடவடிக்கையின் மூலமாக மட்டுமே அதை உபயோகிக்க இயலும். பரிவர்த்தனை நடவடிக்கையின் போது தொழிலாளி முதலாளிக்கு அவசியமான பயன் மதிப்பைக் கொண்டிருக்கின்ற தன்னுடைய உழைப்புச் சக்தியைத் தருகிறார், பரிவர்த்தனை செய்கின்ற சமத்துவத் தரப்பாளராகச் செயலாற்றுகிறார்.

கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்புத் தகுதியை பரிவர்த்தனைக்குத் தருகிறார்; ஏனென்றால் அவருடைய உழைப்பின் உற்பத்திப் பொருள் அவருடைய உடைமை அல்ல. அவர் வாழ்க்கைச் சாதனங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்; அவற்றைப் பெறுவதற்கு உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளரிடம் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்.

இக்கருதுகோள்கள் மூலதனம் நூலின் இரண்டாவது கைப் பிரதியில், 1861—1863 ஆம் ஆண்டுகளைச் சேர்ந்த பொருளாதாரக் கையேடுகளில் வளர்த்துக் கூறப்படுகின்றன. பரிவர்த்தனை செய்கின்ற இரு தரப்பினரும் அந்தப் பரிவர்த்தனை நடவடிக்கையிலிருந்து தோன்றுவதைத் தவிர வேறுவிதமான சார்பு நிலை உறவுகளில் இருக்கவில்லை என்பதை

மார்க்ஸ் மீண்டும் வலியுறுத்துகிறார். ஆகவே தொழிலாளி தன்னிடமுள்ள பண்டத்தின் உடைமையாளர் என்ற முறையில் பரிவர்த்தனை செய்கின்ற இரண்டு தரப்பில் ஒருவராக இருக்கிறார்; அந்தப் பண்டத்தை சமமதிப்புக்குப் பரிவர்த்தனையாகத் தருவதற்கு முன்வருகிறார். அவர் தன்னுடைய உழைப்புச் சக்தியைச் சொந்த உடைமை என்ற முறையில் சுதந்திரமாக விற்பனை செய்கிறார். கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியைச் சந்தையில் விற்பனை செய்கிறார்; ஏனென்றால் தன்னுடைய உழைப்பை ஈடேற்றுகின்ற நிலைமைகள் அவரிடம் கிடையாது. அவை கூலித் தொழிலாளிக்கு முன்னால் அந்நியப்பட்ட நிலைமைகளாக, அடுத்தவருடைய உடைமையாக எதிரிடுகின்றன. அவை கூலியுழைப்பைப் பொறுத்தமட்டில் பருவடிவாக்கப்பட்ட உழைப்பு, மதிப்பு மற்றும் பணமாகத் தோன்றுகின்றன; அவை பாதுகாக்கப்பட்டு அதிகரிக்கப்படுவதற்காகக் கூலியுழைப்புக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. அதனால்தான் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உறவு முற்றிலும் உற்பத்தி உறவாக வெளிப்படுகிறது. முதலாளித்துவ அமைப்பில் அது வாங்குதல் மற்றும் விற்பனை உறவாகக் குறுகிவிடுகிறது. அந்த அர்த்தத்தில் உழைப்புக்கும் அதன் ஈடேற்றத்தின் புறவய நிலைமைகளுக்கும் இடையிலான உறவு சாராம்சத்தில் மற்ற சமூக அமைப்புகளுக்குப் பிரத்யேக

மான உறவுகளிலிருந்து வேறுவிதமாக இருக்கின்றன.

முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளில் உழைப்புக்கு அதன் பொருளாயத நிலைமைகளுக்கும் இடையிலுள்ள உறவு மூடி மறைக்கப்பட்டு, ஆண்டானுக்கும் பண்ணை யடிமைகளுக்கும், அடிமை உடைமையாளர்களுக்கும் கொத்தடிமைகளுக்கும், இதரருக்கும் உள்ள உறவாக இருந்தது, அது அரசியல், சமயம் அல்லது மற்ற முத்திரைகளைப் பெற்றிருந்தது என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். முதலாளித்துவ சமூகத்தில் அந்தப் போர்வை பிய்த்தெறியப்படுகிறது. உழைப்புக்கும் அதன் ஈடேற்றத்தின் நிலைமைகளுக்கும் இடையிலான உறவு முற்றிலும் பொருளாதார உறவாக இருக்கிறது. வாங்குபவரான முதலாளி (உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்)விற்பவரான தொழிலாளியை (உழைப்புச் சக்தியை வைத்திருப்பவர்) எதிரிடுகின்ற அந்த உறவு ஆதிக்கம் உட்பட இதர எல்லா உறவுகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது.

முதலாளித்துவ உறவு முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தியில் நிலவிய கட்டாயத்திலிருந்து வேறுவிதமான கட்டாயத்தைக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ அமைப்பில் கூலித் தொழிலாளி தனக்கு அவசியமான வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுவதற்குக் குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்தாக

வேண்டும். அப்படி உழைக்கின்ற வாய்ப்பைப் பெறுவதற்கு அவர் உபரி உழைப்பு செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார். ஆகவே தொழிலாளி தன்னுடைய சொந்த நலன்களை முன்னிட்டு அப்படி நடந்து கொள்கிறார்.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் நடைபெறுகின்ற பரிவர்த்தனை சமமதிப்புகளின் பரிவர்த்தனையாக இருக்கிறது. தொழிலாளி கூலியில் பருவடிவமாக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்புக்குச் சமமான உழைப்புச் சக்தியை விற்பனை செய்பவராகவும் பரிவர்த்தனை செய்பவராகவும் இருக்கிறார். கூலித் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையேயான சமத்துவம் என்றால் இதுதான் அர்த்தம். தொழிலாளிக்கும் மற்ற பண்ட விற்பனையாளர்களுக்கும் உள்ள வேறுபாடு அவருடைய பண்டத்தின் பிரத்யேகமான பயன் மதிப்பே என்று மார்க்ஸ் வலியுறுத்துகிறார். ஆனால் அப்பயன் மதிப்பின் பிரத்யேகமான இயல்புகள் அந்த பேரம் சமமதிப்புகளின் பரிவர்த்தனை என்னும் பொருளாதார வடிவத்தை மாற்ற முடியாது, மாற்றவுமில்லை. மார்க்ஸ் 1863—1865ஆம் ஆண்டுப் பொருளாதாரக் கையேடுகளில் இப்பொருளைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். சாதாரண பண்ட உற்பத்தியாளர்களுக்கு இடையிலான உறவு, அவர்கள் பல்வேறு பயன் மதிப்புகளில் பருவடிவமாக்கப்பட்டுள்ள தங்களுடைய சொந்த உழைப்பைப்

பரிவர்த்தனை செய்கிறார்கள் என்பதே என்று அவர் எழுதுகிறார்.

தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையில் நடைபெறுகின்ற தொடர்ச்சியான பரிவர்த்தனையைப் பொறுத்தமட்டில், தொழிலாளியின் உழைப்பினால் படைக்கப்பட்ட உற்பத்திப் பொருளின் ஒரு பகுதிக்கு முதலாளி ஈடு செய்கிறார்; அந்த உற்பத்திப் பொருளின் மறு பகுதியை உபரி மதிப்பின் வடிவத்தில் சுவீகரித்துக் கொள்கிறார். ஆகவே தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலுள்ள உறவு வடிவத்தில் சமமதிப்புடையதாக இருந்த போதிலும் சாராம்சத்தில் சமமதிப்பு இல்லாத பரிவர்த்தனையாக மாறுகிறது.

கூலியுழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான அடிப்படையான முதலாளித்துவ உறவைப் பரிவர்த்தனை வடிவம் என்னும் ஒற்றைக் கோணத்தில் பார்க்கக் கூடாது; உழைப்புச் சக்தியை வாங்குதல் மற்றும் விற்பனை நடவடிக்கை (சமமதிப்பு), உழைப்புச் சக்தியை உபயோகிக்கும் நடவடிக்கை (சமமதிப்பு இல்லாதது) என்னும் இரண்டு இடைச்சார்புடைய நடவடிக்கைகளின் ஒருமையாக ஆராயப்பட வேண்டும், இத்தகைய அணுகுமுறையின் மூலமாகவே முதலாளித்துவ உறவுமுறையின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ள இயலும். தொழிலாளியின் உழைப்பினால் படைக்கப்படுகின்ற உபரி மதிப்பை முதலாளி சுவீகரித்துக் கொள்வது அந்த சாராம்சமாகும்.

மேற்கூறிய இரண்டு நடவடிக்கைகளில் முதலாவது—அது உழைப்புச் சக்தியின் நுகர்வில் நேரடியாகப் பங்கெடுக்கவில்லை—கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள முதலாளித்துவ உறவின் ஒரு பகுதியாகும். அது இல்லாமல் உழைப்பைக் கூலி உழைப்பாகவும் பணத்தை மூலதனமாகவும் மாற்ற முடியாது. உழைப்புச் சக்தி விற்பனை நடவடிக்கை இல்லாமல் உபரி மதிப்பை உற்பத்தி செய்ய முடியாது. அதனால்தான் உழைப்புச் சக்தியை வாங்குதல் மற்றும் விற்பனை இன்றியமையாத முக்கியத்துவத்தைக் கொண்ட நடவடிக்கையாக இருக்கிறது. உழைப்புச் சக்தியின் விற்பனை மற்றும் வாங்குதலிலிருந்து தொழிலாளி ஒரு பண்ட உடைமையாளர், அவர் தன்னுடைய பண்டத்தை அதன் மதிப்புக்கு, அதாவது சமமதிப்புக்குப் பரிவர்த்தனை செய்கிறார் என்பது பெறப்படும்.

கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் வகுத்தளிக்கப்பட்ட கருத்துரைகள் மார்க்சின் முக்கியமான நூலாகிய மூலதனத்தின் பூர்வாங்கக் கையேடுகளிலும் மூலதனம் நூலிலும் தர்க்க ரீதியான முழுமையை அடைந்தன. அந்த நூலில் அவர் தன்னுடைய முந்திய கருதுகோள்களைக் குண ரீதியில் புதிய மட்டத்தில் தொகுத்துரைக்கிறார். தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதற்கு இன்றியமையாத இரண்டு நிபந்தனைகளை — அவை முதலாளித்துவ உற்பத்தி முறையினால்

மட்டுமே உருவாக்கப்பட்டவை — தெளிவாக வகுத்துக் கூறுகிறார்.

''பணத்தின் உடைமையாளர் தன்னுடைய பணத்தை மூலதனமாக மாற்றுவதற்குச் சுதந்திரத் தொழிலாளியைச் சந்தையில் சந்திக்க வேண்டும். அவர் இரண்டு அர்த்தங்களில் சுதந்திரமானவராக இருக்க வேண்டும், அதாவது சுதந்திர மனிதர் என்ற முறையில் தன்னுடைய உழைப்புச் சக்தியைத் தன்னுடைய சொந்த பண்டம் என்ற முறையில் விற்பனை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்; மறு பக்கத்தில் விற்பனை செய்வதற்கு மற்ற எந்தப் பண்டமும் இல்லாதவராக, தன்னுடைய உழைப்புச் சக்தியை ஈடேற்றுவதற்கு அவசியமான எதுவுமே இல்லாதவராக இருக்க வேண்டும்.''*

உழைப்பின் புறவய மற்றும் அகவய நிலைமைகள் இல்லாத தொழிலாளி தன்னிடமுள்ள ஒரே பண்டத்தை, உழைப்புத் தகுதியை விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. வாங்குதல் மற்றும் விற்பனை நிகழ்வுப் போக்கில் தொழிலாளி தனது பண்டத்தின் உடைமையாளராக இருக்கிறார், தன்னுடைய சுதந்திரமான சித்தத்தின்படி பரிவர்த்தனைக்கு முன்வைக்கிறார். அவர் தன்னுடைய உழைப்புச் சக்தியைத் திட்டவட்டமான காலத்துக்கு மட்டுமே விற்பனை செய்கிறார். அது உழைப்புச் சக்தி

---

* K. Marx, *Capital*, vol. 1, Moscow, Progress Publishers, 1974, p. 166.

யில் அவர் உடைமையுரிமை கொண்டிருப்பதற்கு உதவுகிறது. ஆகவே அவர் அப்பண்டத்தின் உடைமையாளராக நீடிக்கிறார். தொழிலாளி உழைப்புச் சக்தியின் உடைமையாளர் என்ற முறையில் சட்ட ரீதியில் சுதந்திர மனிதராக, சமத்துவமான பண்ட உடைமையாளராக முதலாளியுடன் பரிவர்த்தனை செய்துகொள்கிறார். ஆனால் உழைப்புச் சக்தியின் நுகர்வு ஆரம்பமானவுடன் சமமதிப்புகளின் பரிவர்த்தனை கணிசமான மாற்றங்களை அடைகிறது.

தொழிலாளியின் உழைப்பினால் படைக்கப்பட்ட பொருள் அவருக்குச் சொந்தமல்ல; அது முதலாளிக்கே சொந்தமாகிறது. அவர் தொழிலாளியினால் படைக்கப்பட்ட உபரி மதிப்பையும் சுவீகரித்துக் கொள்கிறார். அது எவ்விதச் செலவும் இல்லாமலே அவருக்குக் கிடைக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தொழிலாளி படைத்த பொருளின் ஒரு பகுதியை முதலாளி எத்தகைய சமமதிப்பையும் கொடுக்காமல் எடுத்துக் கொள்கிறார். ஆகவே சமமதிப்புள்ள ஒரு உறவு சமமதிப்பு இல்லாத உறவைத் தோற்றுவிக்கிறது என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதும் அடிப்படையான முதலாளித்துவ உறவின் வடிவமாக இருக்கிறது; முதலாளி சமமதிப்பைத் தராமல் மற்றவர்களின் உழைப்பை சுவீகரிப்பதும், சுவீகரிக்கப்பட்ட, பருவடிவாக்கப்பட்ட மற்றவர்

களுடைய உழைப்பை மற்றவர்களுடைய மெய்யான(உயிர் வாழும்) உழைப்புக்குத் தொடர்ச்சியாகப் பரிவர்த்தனை செய்துகொள்வதும் அந்த உறவின் உள்ளடக்கமாகும். மற்றவர்களுடைய உழைப்பை சுவீகரிக்கின்ற முதலாளித்துவ முறை பண்ட உற்பத்தி விதிகளை நிராகரிக்கவில்லை, உண்மையில் அந்த விதிகளின் செயல்பாட்டிலிருந்தே தோன்றுகிறது என்று மார்க்ஸ் கூறுகிறார். பண்ட உழைப்புச் சக்தியின் பயன் மதிப்பு, மதிப்பைப் படைக்கவும் பெருக்கவும் முடியும் என்னும் விசேஷ குணாம்சத்தினால் முதலாளி உபரி மதிப்பைப் பெறுகிறார். அதே சமயத்தில் பயன் மதிப்பு பண்டப் பரிவர்த்தனை விதியைப் பாதிக்கவில்லை. பண்டங்களின் பரிவர்த்தனை, அவை வெவ்வேறு பயன் மதிப்புகளைக் கொண்டிருப்பதை முன்னூகிக்கிறது. ''பரிவர்த்தனை விதி ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்யப்படுகின்ற பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்புகளுக்கு இடையில் மட்டுமே சமத்துவத்தைக் கோருகிறது'' என்று மார்க்ஸ் கூறுகிறார்.* தொழிலாளி அவருடைய உழைப்புச் சக்தியின் பரிவர்த்தனை மதிப்புக்குரிய கூலியைப் பெறுகிறார்; ஆகவே பண்டத்தின் உடைமையாளர்களுக்கு இடையில் சமத்துவக் கோட்பாடு கடைப்பிடிக்கப்படுகிறது.

தொழிலாளியின் சமத்துவத்தை முற்றிலும்

* *Ibid.*, p. 548.

திட்டவட்டமான அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டும்: செலவழிக்கப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்பை ஈடு செய்தல், அதாவது சமமதிப்புடைய ஈடு என்பது பண்டப் பரிவர்த்தனை விதிகளிலிருந்து பெறப்படும். ஆகவே முதலாளியிடம் செய்கின்ற பரிவர்த்தனையில் தொழிலாளியின் சமத்துவம் வெறும் தோற்றமே அன்றி வேறல்ல. முதலாளி மற்றொரு நபருடைய உழைப்பை, அதாவது தொழிலாளியின் உழைப்பைச் சமமதிப்பைத் தராமல் சுவீகரித்துக் கொள்வது அப்பரிவர்த்தனையின் உள்ளடக்கமாகும்.

சுதந்திரமான தொழிலாளி பண்டம் என்ற முறையில் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதற்குச் சந்தைக்கு வருதல் என்னும் ஒரு வரலாற்று நிபந்தனை கூட ஒரு வரலாற்றுக் கட்டத்தை—சமூக உற்பத்தியில் விசேஷமான சகாப்தம் என்ற முறையில் முதலாளித்துவத்தின் தோற்றத்தை—கொண்டிருக்கிறது என்பதை மார்க்ஸ் மூலதனம் நூலில் வலியுறுத்துகிறார். வரலாற்று வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் உழைப்பு கூலியுழைப்பாக, உழைப்புச் சக்தி பண்டமாக மாறுதல் முதலாளித்துவ உற்பத்தி முறையின் விசேஷமான அம்சம் என்பதை மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்: ''தொழிலாளியின் பார்வையில் உழைப்புச் சக்தி அவருடைய உடைமையான பண்டத்தின் வடிவத்தைப் பெறுகிறது; ஆகவே அவருடைய உழைப்பு கூலியுழைப்பாக மாறு

கிறது. மறு பக்கத்தில் இத்தருணத்திலிருந்து மட்டுமே உழைப்பின் உற்பத்திப் பொருள் சர்வப்பொதுவான பண்டமாக மாறுகிறது. முதலாளித்துவ சகாப்தத்தின் குணாம்சம் இது.''* மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் எடுத்துக்காட்டிய முதலாளித்துவத்தின் உள்ளூறுப்பை இவ்விதத்தில் தனிப்பிரித்து, ஆழப்படுத்தி வரையறுப்பை அளிக்கிறார்.

மார்க்ஸ் இந்த நூலில் கூலியுழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள உறவை சமூக உறவு என்பதாகப் பார்க்கும் பொழுது தனக்கு முந்தியவர்களிடமிருந்து வேறுபடுகிறார்; அவர் அதை திரட்டப்பட்ட உழைப்புக்கும் நேரடியான உழைப்புக்கும் இடையிலுள்ள பொருளாயத உறவாகப் பார்க்கவில்லை. அதனால்தான் அவர் தன்னுடைய முதல் கட்டுரையிலேயே கூலித் தொழிலாளியின் உழைப்பின் பிரத்யேகத் தன்மைகளை வெளிக்காட்ட முடிந்தது. முதலாளித்துவ அமைப்பில் உழைப்பு ஏன் கூலியுழைப்பாக மாறுகிறது, தொழிலாளி தன்னுடைய உழைப்பை, உழைப்புத் தகுதியை விற்பனை செய்வதற்குத் தூண்டுவது எது என்பதை அவர் எடுத்துக்காட்ட முடிந்தது. ஆகவே கூலியுழைப்பும் மூலதனமும் நூலின் முதல் பிரிவு பிற்காலத்தில் மார்க்ஸ் உருவாக்கிய உபரி மதிப்புத் தத்துவத்தின் முக்கியமான கூறுகளைக் கொண்டிருக்கிறது என்று உறுதியாகக் கூற முடியும்.

* *Ibid.*, p. 167.

## கூலி எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?

மார்க்ஸ் தன்னுடைய முதல் கட்டுரையில் முதலாளித்துவ அமைப்பில் கூலியைத் திட்ட வட்டமான பண்பு என்ற முறையில் ஆராய்ந்து பிரத்யேகமான பண்டம் என்ற அளவில் உழைப்பின் (உழைப்புச் சக்தியின்) விலை அது என்று எடுத்துக்காட்டினார். இரண்டாவது கட்டுரையில் அவர் கூலியைத் திட்டவட்டமான அளவு என்ற முறையில் ஆராய்கிறார். பண்ட உழைப்பின் (உழைப்புச் சக்தியின்) விலை என்ற முறையில் கூலி எல்லாப் பண்டங்களின் விலை களையும் ஒழுங்குபடுத்துகின்ற அதே விதிக ளால், அதாவது மதிப்பு விதி மற்றும் சப்ளைக் கும் தேவைக்கும் இடையிலுள்ள உறவினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. இந்தப் பின்னணியில் மார்க்ஸ் மதிப்பு விதியின் செயல்பாட்டுக்குத் திரும்புகிறார். அவர் வாங்குபவர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையிலும், தனிப் பட்ட நலன்கள் காரணமாக வாங்குபவர்கள் மத்தியிலும் விற்பனையாளர்கள் மத்தியிலும் உக்கிரமான போட்டி நடைபெறுவதை எடுத் துக்காட்டுகிறார். அப்போட்டியின் போது விலைகள் மதிப்பைச் சுற்றிலும் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கின்றன; அது ஒரு துறை

யிலிருந்து மற்றொரு துறைக்கு மூலதனப் பாய்ச்சல் மீதும் அதற்குத் தகுந்த முறையில் நடைபெறுகின்ற பண்ட உற்பத்தி இயக்கத் தின் மீதும் நேரடியான தாக்கத்தைக் கொண் டிருக்கிறது.

ஒரு பண்டத்தின் விலை அதன் மதிப்புக்கு மேலே உயர்கின்ற கட்டங்கள், அதன் மதிப் புக்குக் கீழே இறங்குகின்ற கட்டங்களால் சமப் படுத்தப்படுகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை மொத்தமாக எடுத்துக் கொண் டால், பண்டத்தின் விலை அதன் மதிப்புடன் பொருந்துகிறது என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டு கிறார். அந்த சமயத்தில் மார்க்ஸ் மதிப்பை டேவிட் ரிக்கார்டோவின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இன்னும் நிர்ண யித்துக் கொண்டிருந்தார். மதிப்பின் அளவை நிர்ணயிக்கின்ற உழைப்புச் செலவு கூலியுழைப் பும் மூலதனமும் நூலில் உற்பத்திச் செலவாக, ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவ சியமான உழைப்பு நேரமாகத் தோன்றுகிறது. பண்ட உற்பத்தியாளருடைய உழைப்பின் இரட்டைத் தன்மையை மார்க்ஸ் இன்னும் கண்டுபிடிக்கவில்லை, மதிப்பு சூக்குமம் உழைப் பினால் படைக்கப்படுகிறது என்பதை அவர் இன்னும் எடுத்துக்காட்டவில்லை. வேறு வார்த் தைகளில் சொல்வதென்றால் சமூக ரீதியில் அவசியமான உழைப்புச் செலவின் மூலம் (சந் தையில் பண்டப் பரிவர்த்தனையின் மூலம் மட் டுமே அவ்வுழைப்பின் சமூகத் தன்மை தெளி

வாகும்) மதிப்பை நிர்ணயிப்பதற்கு அவர் இன்னும் வரவில்லை.

ஆனால் **கூலியுழைப்பும் மூலதனமும்** நூலில் கூட இரண்டாவது கட்டுரையில் மார்க்ஸ் மதிப்பு விதியைப் பற்றி முற்றிலும் புதியஅணுகு முறையைக் கடைப்பிடிக்கிறார். பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் மூலச்சிறப்பு டைய பொருளியலாளர்கள் (ரிக்கார்டோ உட் பட) சந்தை விலைகள் மதிப்புக்குச் சமமாக இருப்பதில்லை, அதைச் சுற்றி ஏறியிறங்கு கின்றன என்பதைக் கண்டார்கள். ஆனால் இந்த ஏற்றயிறக்கங்கள் பண்ட உற்பத்தியில் மதிப்பு விதியின் செயல்பாட்டிற்கு விதிவிலக்கு கள் என்று கருதினார்கள்.

விலை ஏற்றம் விலை இறக்கத்தினாலும் இறக்கம் ஏற்றத்தினாலும் ஈடுகட்டப்படுகின்ற அராஜக இயக்கம் தற்செயலானது என்று கருதக்கூடாது என்று மார்க்ஸ் வலியுறுத்தினார். ''இந்த ஏற்றயிறக்கங்களை மேலும் நெருங்கிச் சென்று பார்க்கையில், தம்முடன் படுபயங்கர நாசங்களைக் கொண்டு வந்து, பூகம்பங்களைப் போல முதலாளித்துவச் சமுதாயத்தை அதன் அடித்தளங்களும் அடங்கலாய் ஆட்டிக் குலுக்கு கின்றவை இவையேதான் என்பது தெரியும். இந்த ஏற்றயிறக்கங்களின் போதுதான் விலை கள் உற்பத்திச் செலவினால் நிர்ணயிக்கப்படு கின்றன. இந்த ஒழுங்கின்மையின் ஒட்டுமொத்த இயக்கம்தான் இதன் ஒழுங்காகும். இந்தத் தொழில்துறை அராஜகத்தின் போது, வட்

டத்திலான இந்த இயக்கத்தின் போது போட்டியானது ஓர் அதீத நிலையை மற்றோர் அதீத நிலையால் ஈடுகட்டுவதாய்ச் சொல்ல வேண்டியிருக்கிறது'' என்று அவர் எழுதினார்.* மதிப்பைச் சுற்றிலும் விலைகளின் தவிர்க்க முடியாத ஊசலாட்டங்கள் மதிப்பு விதியை மீறவில்லை, அதற்கு மாறாக அவை தற்செயலான பண்ட உற்பத்தியின் நிலைமைகளில் அதன் இயல்பிலிருந்தே தோன்றுகின்றன என்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டினார். மூலச்சிறப்புடைய பூர்ஷ்வா அரசியல் பொருளியலாளர்கள் மற்றும் இதரர்களிலிருந்து மாறுபட்ட முறையில் மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்தில் மதிப்பு விதி அந்த சமூகத்துக்குப் பிரத்யேகமான முறையில் வெளிப்படுகிறது, வேறு எவ்வித முறையிலும் அது வெளிப்பட முடியாது என்று எடுத்துக்காட்டினார்.

தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டமாகிய அவனுடைய உழைப்பு (உழைப்புச் சக்தி) மதிப்பு விதிக்கு உட்பட்டதே; ஆகவே உழைப்பின் விலை அதனுடைய உற்பத்திச் செலவினால் நிர்ணயிக்கப்படுகிறது. தொழிலாளி வாழ்க்கை நடத்துவதற்கும் இனவிருத்திக்கும் தொழிலாளி என்ற முறையில் பயிற்சி பெறுவதற்கும் அவசியமான வாழ்க்கைச் சாதனங்கள் அந்த உற்பத்திச் செலவாகும்.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 38.

இந்த வாழ்க்கைச் சாதனங்களின் விலை குறைந்தபட்சக் கூலியாக இருக்கிறது; அந்த மையத்தைச் சுற்றி மெய்யான கூலிகள் ஏறி இறங்குகின்றன. குறைந்தபட்சக் கூலி ஒரு தனிப் பட்ட தொழிலாளிக்கென்று நிர்ணயிக்கப்படு வதில்லை; தொழிலாளிகளின் மொத்த வர்க் கத்துக்கும் நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக எல்லாப் பண்டங்களின் விலைகளையும் ஒழுங்குபடுத்துகின்ற மதிப்பு விதியின் அடிப் படையில் குறைந்தபட்சக் கூலியைச் சுற்றி மெய்யான கூலிகள் ஏறியிறங்குகின்றன.

உழைப்பின் (உழைப்புச் சக்தியின்) விலை அல்லது கூலிகள் உழைப்புச் சந்தையின் சப்ளை மற்றும் தேவை விதியைப் பொறுத்து ஏறியிறங்குகின்றன. தேவை சப்ளையைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்ற பொழுது தொழிலாளர்கள் தங்களுடைய உழைப்பை அதன் உற்பத்திச் செலவைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்பனை செய்ய முடிகிறது. ஆனால் தேவையைக் காட்டிலும் சப்ளை அதிகமாக இருக்கின்ற பொழுது அவர்கள் தங் களுடைய உழைப்பை (உழைப்புச் சக்தியை) சாதாரண உழைப்பின் உற்பத்திச் செலவுகளுக் கும் கூடப் பற்றாத விலைக்கு விற்பனை செய் கிறார்கள். தனிப்பட்ட தொழிலாளர்கள், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வதற் கும் தம்மைப் புனருற்பத்தி செய்துகொள் வதற்கும் போதிய அளவு பெறுவதில்லை; ஆனால் தொழிலாளி வர்க்கம் அனைத்துக்கு

மான கூலியானது அதன் ஏற்றயிறக்கங்களின் வரம்புகளுக்குள் இந்தக் குறைந்தபட்ச மட்டத்தை அடைய முனைகிறது என்று மார்க்ஸ் சாதாரண உழைப்பின் உற்பத்திச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கினார்.*

1840க்களில் மார்க்ஸ் கூறிய குறைந்த பட்சக் கூலிக் கருதுகோளில் குறைந்தபட்சக் கூலி தொழிலாளியின் உடலியல் தேவைகளுக்கு அவசியமான வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்புடன் பொருந்துவதை மட்டும் குறிக்கவில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். குறைந்த பட்சக் கூலி என்னும் கருதுகோள் ஃபிசியோக்ராட்டுகள் காலத்தில் உருவாக்கப்பட்டது என்று மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.** அது ஆடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோவின் பொருளாதாரத் தத்துவத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும். ஆன். டியுர்கோ, ஆடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோ குறைந்த பட்சக் கூலியை முற்றிலும் உடலியல் தேவைகளுக்கு அவசியமான பிழைப்புச் சாதனங்களின் மதிப்புக்குக் குறைக்கவில்லை; அவர்கள் சமூகத் தேவைகளுக்கு அவசியமான வாழ்க்கைச் சாதனங்களையும் அதில் சேர்த்துக் கொண்டார்கள். உதாரணமாக, டியுர்கோ பொருளாதார நிலவரம் மோசமாயிருக்கும் பொழுது தொழிலாளியைக் காப்பதற்கும் அவருடைய

---

* அதே நூல், பக்கம் 41 பார்க்க.

** See: K. Marx, *Theories of Surplus Value*, Part I, Moscow, Progress Publishers, 1975, p. 45.

குழந்தைகளின் கல்விக்கும் அவசியமான வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பும் குறைந்த பட்சக் கூலியில் சேர்ந்திருக்கிறது என்று கூறினார். தொழிலாளியின் உழைப்பின் அடிப்படை விலையில் குறிப்பிட்ட லாபமும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; அப்பொழுதுதான் அவர் கஷ்டங்கள் ஏற்படுகின்ற காலங்களை சமாளிக்க முடியும், குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவிக்க முடியும் என்று அவர் கூறினார்.

தொழிலாளியின் குறைந்தபட்சக் கூலியில் அவருடைய குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு அவசியமான பகுதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆடம் ஸ்மித் கருதினார், உழைப்பின் விலையில் முக்கியமான வாழ்க்கைத் தேவைகளின் மதிப்பு, வாழ்க்கை வசதிகளின் மதிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும் என்று அவர் அடிக்கடி வலியுறுத்தினார். ஆடம் ஸ்மித் சட்ட இயல் பற்றி அவருடைய சொற்பொழிவுகளில் தொழிலாளியின் உழைப்பின் இயற்கையான விலையை ''உழைப்பு நேரத்தில் அவரைப் பராமரிப்பதற்குப் போதுமான, கல்விச் செலவு, திடீர் மரணம், தொழிலில் இடைவேளைகள் ஆகிய ஆபத்துகளை ஈடு செய்வதற்குப் போதுமான''* வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பைச் சேர்த்துக் கொண்டு நிர்ணயிக்க வேண்டும் என்று கூறினார். ஆகவே

* A. Smith, *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations*, vol. 1, London, Clarendon Press, 1976, p. 20.

குறைந்தபட்ச வாழ்க்கைச் சாதனங்களின் மட்டத்தில் நிர்ணயிக்கப்படுகின்ற கூலி முற்றிலும் உடலியல் ரீதியான தேவைகளை மட்டும் கணக்கிலெடுத்துக் கொள்ளாது.

டேவிட் ரிக்கார்டோ குறைந்தபட்ச வாழ்க்கைச் சாதனங்களின் மட்டத்தில் கூலியை நிர்ணயிப்பதில் ''இன்றியமையாத பொருட்களின்'' மதிப்பை மட்டுமன்றி, ''நெடுங்காலப் பழக்கத்தினால் அவசியமாகிவிட்ட வசதிகள்'', தொழிலாளிக்கும் அவருடைய குடும்பத்துக்கும் அவசியமான ''வசதிகள்'' ஆகியவற்றையும் சேர்த்துக் கொண்டார். ரிக்கார்டோவிடம் ''சப்ளை மற்றும் தேவை விதி உழைப்பின் சராசரி விலையைத் தொழிலாளியைப் பராமரிப்பதற்குக் குறிப்பிட்ட சமூகத்தில் உடலியல் அல்லது **சமூக ரீதியில் இன்றியமையாத** வாழ்க்கைச் சாதனங்களாக வகைப்படுத்துகிறது'' என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார்.*

உழைப்பின் இயற்கையான விலை என்ற முறையில் குறைந்தபட்சக் கூலியைப் பற்றி டியுர்கோ, ஸ்மித், ரிக்கார்டோ ஆகியோருடைய கருதுகோள்கள் பண்ட உழைப்பின் விற்பனையைப் பற்றிய கருதுகோளிலிருந்து தோன்றுகின்றன. முதலாளிக்கு அவசியமான அன்றாட உழைப்பு நேரத்துக்கு, அதாவது உதாரணமாக 12 மணி நேரத்துக்கு மரபு அல்லது

---

* K. Marx, *Theories of Surplus Value*, Part II, p. 400. (அழுத்தம் என்னுடையது—ஆசிரியர்.)

பழக்கத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு இன்றியமையாத வாழ்க்கைச் சாதனங்களுக்குரிய கூலியைக் கொடுப்பது போதும். அன்றாட உழைப்புச் செலவு தொழிலாளியின் உடலின் தேய்மானம் ஈடு செய்யப்படுகிறதா, இல்லையா, தொழிலாளி 10, 20 அல்லது 30 ஆண்டுகள் உழைத்திருக்கிறாரா ஆகியவற்றைப் பொறுத்திருக்கவில்லை. உழைப்புச் சக்தியின் தேய்மானம் ஈடு செய்யப்படாதிருக்கின்ற பொழுது தொழிலாளியின் உழைப்புத் தகுதியின் (புரதப் பொருள், மாச்சத்து, இதரவற்றின் செலவு) கால அளவு குறைவதற்கு முற்படுகிறது என்ற போதிலும் கூலி பிழைப்புச் சாதனங்களின் குறைந்தபட்ச அளவுடன் நின்றுவிட்டால் கூட தொழிலாளி தன்னுடைய உழைப்புத் தகுதியைப் புனருற்பத்தி செய்ய முடியும். அதன் காரணமாக, முதலாளிக்கு அவசியமான அன்றாட உழைப்பைச் செலவிடுதல் குறைந்தபட்ச பிழைப்புச் சாதனங்களின் மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட கூலியைக் கொண்டும் சாத்தியமாக இருக்கிறது. தொழிலாளி தன்னுடைய உழைப்பை விற்பனை செய்கிறார் என்னும் அனுமானத்திலிருந்து நாம் முன்னேறினால் டியுர்கோ, ஸ்மித் மற்றும் ரிக்கார்டோ உருவாக்கிய முடிவு, அதாவது உழைப்பின் விலை குறைந்தபட்சக் கூலியினால் நிர்ணயிக்கப்படுகிறது என்பது முற்றிலும் தர்க்க ரீதியானதே. மார்க்ஸ் 1840க்களில் தொழிலாளி தன்னுடைய உழைப்பை — உழைப்புச் சக்தியை

அல்ல—விற்பனை செய்கிறார் என்னும் மூலச் சிறப்புடைய பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரக் கருதுகோளை இன்னும் பின்பற்றினார். ஆகவே உழைப்பின் மதிப்பு தொழிலாளியைப் பராமரிப்பதற்கு அவசியமான குறைந்தபட்ச வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பு என்றும் உழைப்பின் விலை (தொழிலாளியின் கூலி) சராசரியாக குறைந்தபட்சக் கூலி மட்டத்தில் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் அவர் கருதியது இயற்கையே. அவர் குறைந்தபட்சக் கூலியைத் தொழிலாளியின் உடலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான பிழைப்புச் சாதனங்களின் மதிப்புடன் இனங்காணவில்லை, அவருடைய சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான வாழ்க்கைச் சாதனங்களையும் அதில் சேர்த்தார்.

மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலுடன் நேரடியாக இணைந்திருக்கின்ற கூலி என்னும் கையெழுத்துப் பிரதியில் குறைந்தபட்சக் கூலியில் கூலித் தொழிலாளியின் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வாழ்க்கைச் சாதனங்கள் சேர்ந்திருக்கின்றன என்று தெளிவாகக் கூறினார். ‘‘...தொழிலாளர்கள் அரசியல் மற்றும் தொழில்துறை சங்கங்களை அமைப்பதற்கும் அந்த இயக்கத்துக்குச் செலவழிப்பதற்கும் தங்கள் கூலியிலிருந்து இயன்ற எல்லாவற்றையும் செலவிடுகிறார்கள். திருவாளர்கள் முதலாளிகளும் அவர்களுடைய பொருளியலாளர்களும் தங்களுடைய

இரக்கமான தருணங்களில் குறைந்தபட்சக் கூலியில், அதாவது குறைந்தபட்ச வாழ்க்கையில், சிறிதளவு தேநீர் அல்லது ரம் அல்லது ஜீனி மற்றும் இறைச்சியைக் கனிவுடன் அனுமதிக்க முன்வந்தால் தொழிலாளர்கள் இந்தக் குறைந்தபட்சத்திலிருந்து முதலாளி வர்க்கத்தை எதிர்த்துத் தங்களுடைய போருக்குச் செலவு செய்வதும் அந்தப் புரட்சிகர நடவடிக்கையின் மூலம் வாழ்க்கையை உச்ச அளவுக்குக் கூட அனுபவிப்பதும் வேறுபாட்டின் அடிப்படையில் வெட்கக் கேடானதாகவும் புரிந்து கொள்ள முடியாததாகவும் அவர்களுக்குத் தோன்றும்'' என்று மார்க்ஸ் எழுதினார்.* ஆகவே குறைந்தபட்சக் கூலி என்பது முற்றிலும் உடலியல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய பிழைப்புச் சாதனங்களின் மதிப்புடன் நிற்கவில்லை, சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பும் அதில் சேர்ந்திருக்கிறது என்பது தெளிவாகும்.

மூலச்சிறப்புடைய பூர்ஷ்வா அரசியல் பொருளியலாளர்களான ஆடம் ஸ்மித்தும் டேவிட் ரிக்கார்டோவும் குறைந்தபட்சக் கூலியை மக்கள்தொகை அளவில் ஏற்படுகின்ற மாற்றங்களுடன் தொடர்புபடுத்தினார்கள். மக்கள்தொகை குறைகின்ற பொழுது அல்லது அதிகரிக்கின்ற பொழுது பண்டம் என்ற முறை

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 6, pp. 435—436.

யில் உழைப்பின் சந்தை விலை அதன் இயற்கை யான விலையைச் சுற்றி ஏறியிறங்குகிறது என்று அவர்கள் கருதினார்கள். முதலாளித் துவ அமைப்பில் கூலிகளின் இயக்கம் கூலி யுழைப்பு மற்றும் மூலதனத்துக்கு இடையிலான உறவுகளின் பிரத்யேகத் தன்மைகளினால் நிர் ணயிக்கப்படுகிறது என்பதை மார்க்ஸ் **கூலி யுழைப்பும் மூலதனமும்** நூலில் எடுத்துக்காட்டி னார். பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் கூறு வதைப் போல உயிரியல் விதிகள் கூலித் தொழி லாளர்களின் கூலியைக் குறைந்தபட்சமாகக் குறைக்கவில்லை, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளே அதைக் குறைக்கின்றன என்பதை மார்க்ஸ் நிரூபித்தார். மார்க்ஸ் அந்தப் பொறி யமைவை ஐந்தாவது கட்டுரையில் விளக்கு கிறார். நாம் அதைப் பிறகு எடுத்துக் கொள் வோம்.

குறைந்தபட்சக் கூலி என்பது மூலதனத் துக்கு அவசியமான மட்டத்தில் தொழிலாளி மற்றும் அவருடைய உழைப்புச் சக்தியைப் புனருற்பத்தி செய்வதை உறுதிப்படுத்துகின்ற தொழிலாளியின் சராசரி கூலி ஆகும். மார்க்ஸ் இப்பிரச்சினையை மேலும் நுணுக்கமாகவும் புதிய தத்துவ மட்டத்திலும் தன்னுடைய 1857—1858, 1861—1863 மற்றும் 1863—1865ஆம் ஆண்டுகளின் பொருளாதாரக் கை யேடுகளில் ஆராய்கிறார். சராசரிக் கூலிப் பிரச்சினையை மார்க்ஸ் **கூலியுழைப்பும் மூல**

தனமும் நூலில் முதல் முறையாக வகுத்தளித்தார்.

குறைந்தபட்சக் கூலிக் கருதுகோள் 1840க்களில் மார்க்சின் தத்துவத்தில் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. அவர்களுடைய குறைந்தபட்சக் கூலியின் அதிகரிப்பைக் கூலித் தொழிலாளர்களின் புரட்சிகர உணர்ச்சியுடன் அவர் இணைத்தார், கூலி உயர்வுக் கோரிக்கை தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கியமான காரணியாக இருக்கிறது என்று கருதினார். ''...கூலியின் ஏற்றயிறக்கங்கள் தொழிலாளியைப் புரட்சிகரமாக்குவது மட்டுமன்றி... குறைந்தபட்சத்துக்கு மேல்கூலி தற்காலிகமாக அதிகரிக்கவில்லை என்றால் அவர் உற்பத்தியின் எல்லா முன்னேற்றங்களிலிருந்து, பொதுச் செல்வத்தின் அதிகரிப்பிலிருந்து, நாகரிகத்தின் வெற்றிகளிலிருந்து, ஆகவே விடுதலையின் எல்லா சாத்தியங்களிலுமிருந்து விலக்கப்பட்டவர்களாக இருப்பார்'' என்று மார்க்ஸ் எழுதினார்.*

* *Ibid.*, p. 426.

## உற்பத்தி உறவு என்ற முறையில் மூலதனம்

மார்க்ஸ் தன்னுடைய மூன்றாவது கட்டுரையில் பொருளாதார வகையினம் என்ற முறையில் மூலதனத்தின் உள்ளடக்கத்தை ஆராய்கிறார்.

மார்க்ஸ் கூலியுழைப்பை வரலாற்றைப் பற்றிய இயக்கவியல் பொருள்முதல்வாதக் கருதுகோளின் அடிப்படையில் ஆராய்வதைப் போல மூலதனத்தையும் ஆராய்கிறார். முதலாவதாக, சமூக உற்பத்தியில் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் என்னும் இரண்டு உட்பகுதிகள் இருக்கின்றன என்று அவர் சுட்டிக் காட்டுகிறார். உற்பத்திச் சக்திகள், இயற்கைச் சக்திகள் மற்றும் பொருட்களுடன் — அவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மக்கள் பொருளாயத மதிப்புகளைப் படைக்கிறார்கள் — உறவுகளைக் குறிக்கின்றன. உற்பத்தி நிகழ்வின் போது மக்கள் தமக்கிடையிலும் இயற்கையின் மீதும் செயல்படுகின்றனர். உற்பத்தி செய்வதற்காக மக்கள் ஒருவருக்கொருவர் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள், பரஸ்பரம் நடவடிக்கைகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். துல்லியமாக இந்த உற்பத்தி உறவுகளின் சுற்றுவட்டத்திற்குள் அவர்கள்

இயற்கை மீது செயல்படுகிறார்கள்; சமூகி உற்பத்தி நடைபெறுகிறது.

உற்பத்தி உறவுகள் அவற்றைத் தகவமைக்கின்ற உற்பத்திச் சக்திகளிலிருந்து பிரிக்கப் பட முடியாதவை; பொருளாயத அடிப்படையில் மாற்றங்களுடன் சேர்ந்து அவை மாறுகின்றன. "...உற்பத்திக்கான பொருளாயதச் சாதனங்களாகிய உற்பத்திச் சக்திகள் மாற்றமடைந்து வளர்ச்சியுறுவதைத் தொடர்ந்து, தனியாட்கள் பொருள் உற்பத்தி செய்வதற்குரிய சமூக உறவுகளும், அதாவது உற்பத்தியின் சமூக உறவுகளும் மாற்றமடைகின்றன" என்று மார்க்ஸ் கூறுகிறார்.* ஆகவே அவர் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் இயக்கவியல் ஒருமை மற்றும் இடைத் தொடர்பை சுட்டிக் காட்டுகிறார். இந்த உறவுகள் பொருளாயத உற்பத்தியின் செயல்முறை மற்றும் வளர்ச்சியின் சமூக பொருளாதார வடிவம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

மார்க்ஸ் எல்லா சமூக உறவுகளிலிருந்தும் உற்பத்தி உறவுகளைப் பிரித்தெடுக்கிறார். அவை எல்லா சமூக நிகழ்வுகளுக்கும் திட்டவட்டமான சமூக இயல்பைத் தருகின்றன. சமூக உறவுகள் என்னும் மொத்த அமைப்பிலிருந்து உற்பத்தி உறவுகளைப் பிரித்தெடுத்தது சமூக நிகழ்வுகளைப் பற்றிய பொருள்முதல்வாத அணுகு

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 42.

முறையில் முக்கியமான கட்டமாக இருந்தது.

''உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தமே சமூக உறவுகள் எனப்படுபவை, சமுதாயம், இன்னும் குறிப்பாய் வரலாற்று வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்திலுள்ள சமுதாயம், தனக்கே உரித்தான தனியொரு குணமுடைய ஒரு சமுதாயம் எனப்படுவது'' என்று மார்க்ஸ் மேலும் வலியுறுத்துகிறார்.*

உற்பத்தி உறவுகள் ஒருங்கிணைந்த அமைப்பாக இருக்கின்றன என்று மார்க்ஸ் இங்கே சுட்டிக் காட்டுவதை நாம் பார்க்க முடியும். அவற்றின் முறைப்படியான தன்மை எந்த சமூகத்திலும் உற்பத்தி உறவுகளின் முக்கியமான அம்சமாக இருக்கிறது. ஒவ்வொரு சமூகத்திலும் அதற்குரிய உற்பத்தி உறவுகளின் மொத்தம் குணாம்சமாக இருக்கிறது. ஆகவே சமூக வளர்ச்சியின் கட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கு உற்பத்தி உறவுகள் முக்கியமான வரையளவாக இருக்கின்றன. மார்க்ஸ் சமூகத்தில் தொடர்ச்சியாக உருவான வரலாற்று ரகங்களைப் பிரித்துக் காட்டுகிறார். ''பண்டையச் சமுதாயம், பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் ஆகியவை உற்பத்தி உறவுகளது இப்படிப்பட்ட ஒட்டுமொத்தங்களே ஆகும்; இவை ஒவ்வொன்றும் அதே போதில் மனிதகுல வரலாற்றில் தனியொரு வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கின்றன'' என்று

---

* அதே நூல், பக்கங்கள் 42—43.

மார்க்ஸ் எழுதுகின்றார்.* ஆகவே ஆதிக்கம் செலுத்துகின்ற உற்பத்தி உறவுகள் ஒரு சமூகத்தின் இயல்பையும் சமூக ரகத்தை யும் நிர்ணயிக்கின்றன; வரலாற்று வளர்ச்சி யில் எந்தக் கட்டத்தைச் சேர்ந்தது என்பதையும் நிர்ணயிக்கின்றன. மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் முதன் முறையாக வகுத்தளித்த இத்தத்துவக் கருதுகோள்களை அதற்குப் பிந்திய நூல்களில் மேலும் விரித்துக் கூறினார். அரசியல் பொரு ளாதாரம் உற்பத்தி உறவுகளை உற்பத்திச் சக்திகளுடன் நெருக்கமான இணைப்பில் ஆராய் கிறது என்று அவர் ஏற்கெனவே கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் குறிப்பிட்டார் என்பது முக்கியமான அம்சமாகும். கூலியுழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள உறவுகளின் உள்ளடக்கத்தை, மூலதனத்தின் சாராம்சத் தை எடுத்துக்காட்டுவது மார்க்சின் மூன்றாவது கட்டுரையின் உடனடியான நோக்கம் என் பதால் மேற்கூறிய அம்சம் அதற்கும் முக்கிய மானதாக இருந்தது.

பூர்ஷ்வா அரசியல் பொருளியலாளர்கள் பொருளாதார வகையினங்களைப் பொருட் களுடன் மக்களுடைய உறவுகள் என்னும் முப் பட்டைக் கண்ணாடியின் வழியாகவே பெரும் பாலும் ஆராய்கிறார்கள்; ஆகவே இந்த வகை யினங்கள் வரலாற்றுக்கு அப்பாற்பட்டவை

---

* அதே நூல், பக்கம் 43.

யாக அல்லது நிரந்தரமானவையாகத் தோன்றுகின்றன. பொருளாதார வகையினம் என்ற முறையில் மூலதனத்தைப் பற்றி பூர்ஷ்வாப் பொருளியலாளர்களின் விளக்கம் இத்தகைய அணுகுமுறையையே எப்பொழுதும் கடைப்பிடித்திருக்கிறது. மார்க்சுக்கு முந்திய பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் மூலதனத்தைச் சேமிக்கப்பட்ட உழைப்பு, புதிய உழைப்புக் கருவிகள், புதிய மூலப் பொருட்கள் மற்றும் புதிய பிழைப்புச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு உபயோகிக்கப்படுகின்ற உழைப்புக் கருவிகள், மூலப் பொருட்கள் மற்றும் பிழைப்புச் சாதனங்களின் மொத்தம் என்பதாக மட்டுமே பார்த்தார்கள்.

மூலதனத்தைப் பற்றிய பூர்ஷ்வாப் பொருளியலாளர்களின் வரையறுப்பை மார்க்ஸ் கறுப்பு அடிமையைப் பற்றிய அவர்களுடைய வரையறுப்புடன் ஒப்பிடுகிறார். கறுப்பு அடிமை என்பவன் கறுப்பு இனத்தைச் சேர்ந்த அடிமை என்று அவர்கள் கூறுகிறார்கள். இதில் எத்தகைய விளக்கமும் இல்லை.

குறிப்பிட்ட உறவுகளின் கீழ் நெசவு இயந்திரம் மூலதனமாக மாறுவதைப் போல கறுப்பு மனிதன் அடிமையாக மாறுகிறான் என்று மார்க்ஸ் வலியுறுத்துகிறார். அந்த உறவுகளுக்கு வெளியே இயந்திரம் மூலதனம் அல்ல அல்லது தங்கம் பணம் அல்ல; அதைப் போல கறுப்பு மனிதனும் அடிமையல்ல.

முதலாளித்துவ சமூகத்தின் உள்ளுறையான

உற்பத்தி உறவுகளின் கீழ் இயந்திரங்கள், மூலப் பொருட்கள் மற்றும் இதர உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் எப்படி மூலதனமாக மாறுகின்றன என்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். முதலாவதாக, உழைப்பின் உற்பத்திப் பொருள் ஒவ்வொன்றும் மூலதனமாகப் பயன்பட முடியாது. ஏனென்றால் சேமிக்கப்பட்ட உழைப்பு என்ற முறையில் உழைப்பின் உற்பத்திப் பொருள் மூலதனமாக மாறுவதில்லை; பரிவர்த்தனை மதிப்புகள் அல்லது பண்டங்கள் மூலதனமாக மாறுகின்றன.

''...மூலதனம் என்பது பொருள் வடிவிலான தொகை மட்டுமல்ல, அது பண்டங்களது, பரிவர்த்தனை மதிப்புகளது, சமூகப் பரிமாணங்களது தொகையும் ஆகும்'' என்று மார்க்ஸ் கூறுகிறார்.* வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மூலதனம் மனித சமூகத்தின் வளர்ச்சியில் திட்டவட்டமான கட்டத்தில், அதாவது பண்ட உற்பத்தியின் நிலைமைகளில் மூலதனம் தோன்றுகிறது. ஆனால் பண்ட உற்பத்தி நடைபெறுதல் மூலதனத்தின் தோற்றத்துக்கு ஒரு நிபந்தனை மட்டுமே. பண்டங்களின் எவ்விதமான தொகுப்பும் பரிவர்த்தனை மதிப்புகளின் தொகுப்பு ஆகும். மற்ற பொருட்களுக்குப் பரிவர்த்தனை செய்யப்படக் கூடிய பொருட்கள் பண்டங்கள் எனப்படுகின்றன. அவை பரிவர்த்தனை செய்யப்

---

* அதே நூல், அதே பக்கம்.

படக் கூடிய விகிதம் பரிவர்த்தனை மதிப்பு என்று சொல்லப்படுகிறது.

பண்டங்களின் அளவில் மாற்றங்கள் பரிவர்த்தனையின் அளவில் மட்டுமே மாற்றங்களை ஏற்படுத்தும்; ஆனால் பரிவர்த்தனை மதிப்பின் சாராம்சத்தை, பரிவர்த்தனை மதிப்புகளின் தொகுப்பு என்னும் பண்டங்களின் குணாம்சத்தை மாற்ற முடியாது. ஆகவே பண்டங்களின், பரிவர்த்தனை மதிப்புகளின் திட்டவட்டமான அளவு அல்லது மொத்தம் எப்படி மூலதனமாக மாறுகிறது என்னும் கேள்வி எழுகிறது. "...நேரடியான, உயிருள்ள உழைப்பு சக்தியுடன் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம்... சமுதாயத்தில் ஒரு பகுதியின் சக்தியாய்ப் பேணிப் பாதுகாத்துக் கொண்டும் பெருகச் செய்து கொண்டும் செல்வதால்" என்று மார்க்ஸ் விளக்குகிறார்.* எவ்விதமான உற்பத்திச் சாதனங்களை அல்லது பிழைப்புச் சாதனங்களையும் சொந்தமாகக் கொண்டிராத, உழைப்புத் தகுதியைத் தவிர மற்றெந்த உடைமையும் இல்லாத வர்க்கம் இருப்பது மூலதனத்துக்கு அவசியமான முன்நிபந்தனையாகும். "சேமிக்கப்பட்டதும், கடந்த காலத்தியதும், பொருள் வடிவிலானதுமாகிய உழைப்பானது நேரடியான, உயிருள்ள உழைப்பின் மீது செலுத்தும் ஆதிக்கம்தான் சேமிக்கப்பட்ட உழைப்பை மூலதனமாய் மாற்றுகின்றது."**

* அதே நூல், பக்கம் 45.

** அதே நூல், அதே பக்கம்.

மூலதனம் என்பது உழைப்பின் உற்பத்திப் பொருட்களை அல்லது புதிய உற்பத்திக்கு சாதனமாகப் பயன்படுகின்ற சேமிக்கப்பட்ட உழைப்பைக் கொண்டிருக்கிறது என்று பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் கூறினார்கள். ஆனால் மூலதனத்தின் சாராம்சம் என்னவென்றால் தொழிலாளியின் உயிருள்ள உழைப்பு சேமிக்கப்பட்ட உழைப்பின் மதிப்பைப் பாது காப்பதுடன் பெருக்கவும் செய்கிறது என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார். இது எப்படி நடை பெறுகிறது? கூலித் தொழிலாளி பிழைப்புச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனையாக முதலாளியிடம் தன்னுடைய ''ஆக்க சக்தியை'' அல்லது ''புனருற்பத்திச் சக்தியை'' ஒப்படைக்கிறார். அந்த ''ஆக்க சக்தி'' உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற பொழுது தொழிலாளி நுகர்வு செய்வதைத் திருப்பித் தருவதுடன் சேமிக்கப்பட்ட உழைப்புக்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் கூடுதலான மதிப்பையும் தர முடியும்.

''உற்பத்திச் செயல்முறையின் போது உழைப்புச் சக்தியினால் தொழிலாளி புனருற்பத்தி செய்வதற்கு அவசியமான பிழைப்புச் சாதனங்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமான மதிப்பைப் படைக்க முடியும் என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார். அவர் ஓர் உதாரணத்தின் மூலம் அதை விளக்கினார். விவசாயி ஒருவர் தனது நாட் கூலியாளுக்கு நாள் ஒன்றுக்கு 5 காசுகளைக் கூலியாகத் தருகிறார். கூலியாள்

அந்தப் பணத்துக்கு நாள் முழுவதும் அவருடைய நிலத்தில் வேலை செய்கிறான். அதன் மூலம் அவருக்கு 10 காசுகள் கிடைக்கும்படி செய்கிறான். விவசாயி நாட் கூலியாளுக்குத் தான் கொடுத்த மதிப்பை மீட்டுக் கொண்டதுடன் அதை இரு மடங்காகப் பெருக்கிக் கொள்ளவும் செய்கிறார். விவசாயி உழைப்புச் சக்திக்குப் பரிவர்த்தனையாகக் கொடுத்த 5 காசுகள் உற்பத்திச் செயல்முறையில் உழைப்புச் சக்தி நுகர்வு செய்யப்பட்டதன் விளைவாக 10 காசுகளைக் கொடுத்திருக்கின்றன. மார்க்ஸ் இந்த நூலில் மூலதனத்தின் சுய வளர்ச்சியின் பொறியமைவைக் கண்டுபிடிப்பதற்கு மிகவும் நெருக்கமாக வந்துவிட்டார். மூலதனம் உழைப்புக்கு, தொழிலாளியின் புனருற்பத்திச் சக்திக்கு, அவருடைய உழைப்புச் சக்திக்குத் தன்னைப் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலமாக மட்டுமே அதிகரிக்க முடியும் என்று அவர் கூறினார். கூலியுழைப்பு இல்லாமல் மூலதனம் இருக்க முடியாது. ''மூலதனத்துக்கு முன்தேவை கூலியுழைப்பு; கூலியுழைப்புக்கு முன்தேவை மூலதனம். ஒன்று மற்றொன்றின் முன்னிபந்தனையாய் அமைகிறது, ஒன்று மற்றொன்றைத் தோற்றுவிக்கிறது.''*

ஒரு பருத்தி நெசவாலையில் வேலை செய்கின்ற தொழிலாளி பருத்தித் துணிகளை மட்டும் உற்பத்தி செய்யவில்லை; அவர் மூலதனத்

---

* அதே நூல், பக்கம் 47.

தையும் உற்பத்தி செய்கிறார். அவர் உற்பத்தி செய்கின்ற மதிப்புகள் கூலியுழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக மீண்டும் பயன் படுகின்றன, அதனால் அவரை அடிமைப்படுத்தி இருக்கின்ற சக்தியை வலுப்படுத்துவதற்கு உதவுகின்றன.

மார்க்ஸ் மூலதனத்தின் வர்க்க இயல்பை எடுத்துக்காட்டுகிறார். ஒரு பக்கத்தில் கூலித் தொழிலாளி தனக்கு அந்நியமாகிவிட்ட செல்வத்தை அல்லது மூலதனத்தை உற்பத்தி செய்கிறார். மறு பக்கத்தில் கூலித் தொழிலாளிக்கு முன்னால் மூலதனம் பகை சக்தியாக, அவரைச் சுரண்டுகின்ற சக்தியாக இருக்கிறது.

மார்க்ஸ் மூலதனத்தின் சமூக மற்றும் வர்க்க இயல்பை எடுத்துக்காட்டிய பிறகு அதை வரையறுக்கிறார். முதலாளித்துவ சமூகத்தின் இரண்டு முக்கியமான வர்க்கங்களான கூலித் தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளுக்கு இடையில் சமூக உற்பத்தி உறவு மூலதனம் என்று அவர் கூறினார். மூலதனம் முதலாளித்துவ சமூகத்தில் மட்டுமே உள்ளுறையாக இருக்கின்ற, குறிப்பிட்ட உற்பத்தி உறவை எடுத்துரைக்கிறது. அவர் கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் மூலதனத்துக்குத் தந்த வரையறுப்பு அகல்விரிவானதாக இருந்தபடியால் அதற்குப் பிந்திய நூல்களிலும் அதே வரையறுப்பைப் பயன்படுத்தினார். அவர் மூலதனம் நூலில் அதை ''திட்டவட்டமான சமூக வரலாற்று உருவாக்கத்துக்குச் சொந்தமாகவுள்ள சமூக உற்பத்தி உறவு; அது

பொருளில் வெளிப்படுகிறது, அப்பொருளுக்குப் பிரத்யேகமான சமூகத் தன்மையை அளிக்கிறது''* என்று வரையறுத்தார்.

**கூலியுழைப்பும் மூலதனமும்** நூலின் மூன்றாவது கட்டுரையில் கூலித் தொழிலாளர்களின் நலன்களும் முதலாளிகளின் நலன்களும் முரண்பட்டிருக்கின்றன என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் மார்க்ஸ் காலத்திலும் நம் காலத்திலும் முதலாளி மற்றும் தொழிலாளியின் நலன்கள் ஒரே மாதிரியானவை, இருவருமே முதலாளித்துவ உற்பத்தியை வளர்ப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

தொழிலாளி மற்றும் முதலாளியின் நலன்கள் ஒரே விதமானவை என்று கூறுவதின் சாராம்சத்தை மார்க்ஸ் அம்பலப்படுத்துகிறார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்ற பொழுது தொழிலாளியின் வாழ்க்கையில் சிறிதளவு முன்னேற்றமேனும் ஏற்பட வேண்டுமென்றால் அதற்கு மூலதனத்தின் வளர்ச்சி இன்றியமையாதது என்று தோன்றுகிறது. முதலாளி இல்லாமல் கூலித் தொழிலாளி இருக்க முடியாது என்று கூறுகிறார்கள். அவர் தன்னுடைய உழைப்புத் தகுதியை முதலாளியிடம் விற்பனை செய்யாவிட்டால் அவர் அழிந்து விடுவார். அதே சமயத்தில் முதலாளி தன்னுடைய மூல

* K. Marx, *Capital*, vol. 3, p. 814.

தனத்தை அதிகப்படுத்துவதற்குத் தொழிலாளியின் உழைப்புத் தகுதியை விலைக்கு வாங்க வேண்டும், அவரைச் சுரண்ட வேண்டும். மூலதனம் அதிகரிக்கின்ற அதே வேகத்தில் முதலாளியின் செல்வம் அதிகரிக்கும், அவர் உற்பத்தியை விஸ்தரிப்பார், அவருக்கு அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள். ஆகவே தொழிலாளி அவரிடம் தன்னுடைய உழைப்புத் தகுதியை அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியும். ஆகவே முதலாளியும் கூலித் தொழிலாளியும் மூலதனத்தின் வளர்ச்சியில் ஒரே அளவான அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் மூலதனத்தின் வளர்ச்சி என்பது என்ன? மார்க்ஸ் இந்தப் பிரச்சினையை அடுத்த கட்டுரையில் இன்னும் நுணுக்கமாக ஆராய்கிறார். உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சி தொழிலாளி வர்க்கத்தின் மீது முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ச்சியடைகிறது என்று அர்த்தம் என்று மூன்றாவது கட்டுரையில் கூறுவதுடன் நிறுத்திக் கொள்கிறார். கூலித் தொழிலாளி தனக்கு அவசியமான பிழைப்புச் சாதனங்களை வாங்குவதற்கு முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் கீழ் மற்றவர்களுக்காக செல்வத்தை உற்பத்தி செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்; அந்த செல்வம் அவர் மீது ஆட்சி செலுத்துகிறது, அவருக்கு விரோதமான சக்தியாக இருக்கிறது. அதனால்தான் தொழிலாளி வர்க்கம் மற்றும்

முதலாளி வர்க்கத்தின் நலன்கள் நேரெதிராக இருக்கின்றன. மார்க்ஸ் இதைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: "மூலதனத்தின் நலன்களும் தொழிலாளர்களுடைய நலன்களும் ஒருமித்துவிடுவதாய்க் கூறுவதானது, மூலதனமும் கூலியுழைப்பும் ஒரே உறவின் இரு பக்கங்களாகும் என்று கூறுவதாகுமே ஒழிய வேறல்ல. கொள்ளை வட்டிக்காரரும் ஊதாரியும் எப்படி ஒருவருக்கொருவர் நிபந்தனையாய் அமைகின்றனரோ அதே போல மூலதனமும் கூலியுழைப்பும் ஒன்றுக்கொன்று நிபந்தனையாய் அமைகின்றன.

"கூலித் தொழிலாளி கூலித் தொழிலாளியாய் இருக்கும் வரை அவருடைய கதி மூலதனத்தைச் சார்ந்திருக்கிறது. இவ்வளவுதான் தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையே இருப்பதாய்ப் பெரிதாய் மெச்சிக் கொள்ளப்படும் ஒத்த நலன்."*

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் இருப்பதாகச் சொல்லப்படுகின்ற ஒரே நலன்களை மார்க்ஸ் அம்பலப்படுத்தியிருப்பது நம் காலத்துக்குக் கூட மிகவும் முக்கியத்துவம் உடையதாகும். இன்றைய பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் இக்கருத்தின் பல்வேறு ரகங்களை, "சமூகக் கூட்டுப் பங்காண்மை", "நலன்களின் இணக்கம்", இதர தத்துவங்கள் மற்றும் கருதுகோள்களைத் தொடர்ந்து விரித்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 49.

துரைக்கிறார்கள். இவை அனைத்தும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் கூர்மையான சமூக மோதல்களைத் தணிப்பதை, அரசியல் மற்றும் பொருளாதாரப் போராட்டத்திலிருந்து தொழிலாளி வர்க்கத்தைத் திசை திருப்புவதை, தொழிற்சங்கங்கள் தம்முடைய கோரிக்கைகளைக் குறைத்துக் கொண்டு முதலாளிகள் மற்றும் பூர்ஷ்வா அரசின் கொள்கையை ஆதரிக்குமாறு செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. முதலாளிகளும் தொழிலாளர்களும் ஒரே விதமான நலன்களைக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்ற கட்டுக்கதையைத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்கு நடத்துகின்ற இடைவிடாத போராட்டத்தின் மூலம் விரட்டி விட்டார்கள்.

மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் தொழிலாளி முதலாளியிடம் தன்னுடைய உழைப்பை விற்பனை செய்கிறார் என்று இன்னும் அனுமானித்தார்; அதாவது அவர் இன்னும் உழைப்புக்கும் உழைப்புச் சக்திக்கும் இடையில் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கவில்லை. ஆனால் அவர் தன்னுடைய மூன்றாவது கட்டுரையில் பண்ட உழைப்புச் சக்தியைக் கண்டுபிடிப்பதை நோக்கி முக்கியமான அடியெடுத்து வைத்திருந்தார். அவர் தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டத்தை உழைப்பு, வாழ்க்கை நடவடிக்கை, உற்பத்தி நடவடிக்கை, ஆக்க சக்தி, புனருற்பத்திச் சக்தி, உழைப்புத் தகுதி மற்றும் உழைப்புச் சக்தி என்று

வர்ணித்தார்.* வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மார்க்ஸ் தன்னுடைய சொற்பிரயோகத்தில் பண்ட உழைப்புச் சக்தியை வரையறுப்பதை நோக்கி நெருங்கி வந்தார். மேலும் நூலின் அந்தப் பகுதியில் மார்க்ஸ் பண்ட உழைப்பின் இரண்டு இயல்புகளைப் பிரித்தெடுத்தார்.

கூலியுழைப்பும் மூலதனமும் ஒரே உற்பத்தி உறவின் இரண்டு பக்கங்கள் என்று முடிவு செய்த பொழுது கூலியுழைப்பு ''மூலதனத்தை அதிகப்படுத்தி தான் எதற்கு அடிமையாய் இருக்கிறதோ அந்தச் சக்தியை மேலும் வலுப்படுத்தினால்'' மட்டுமே மூலதனம் இருப்பதும் தன்னைப் பெருக்கிக் கொள்வதும் சாத்தியம் என்று மார்க்ஸ் முடிவு செய்தார்.** ஆகவே மூலதனம் எப்படி அதிகரிக்கிறது என்னும் கேள்வி எழுகிறது. மூலதனத்துக்கு உழைப்பைப் பரிவர்த்தனை செய்கின்ற செயல்முறை மீது மார்க்ஸ் கவனத்தைக் குவிக்கிறார். பிழைப்புச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனையாக முதலாளி தொழிலாளியின் உழைப்பைப் பெறுகிறார். அந்த உழைப்பு இரண்டு இயல்புகளைக் கொண்டிருக்கிறது: ஒரு பக்கத்தில் தொழிலாளி தான் நுகர்வு செய்கின்ற அனைத்தையும் திருப்பித் தருகிறார், மறு பக்கத்தில்

---

* அதே நூல், பக்கங்கள் 28, 45, 46 பார்க்க.

** அதே நூல், பக்கங்கள் 47—48.

அவர் சேமிக்கப்பட்ட உழைப்புக்கு அதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகமான மதிப்பைத் தருகிறார் என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். ''தொழிலாளி தமது உழைப்புச் சக்திக்குப் பரிவர்த்தனையாய்ப் பிழைப்புச் சதானங்களைப் பெறுகிறார். ஆனால் முதலாளியோ தமது பிழைப்புச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனையாய்த் தொழிலாளியின் உழைப்பை, தொழிலாளியின் பொருள் உற்பத்தித் திறனுள்ள செயற்பாட்டை, தொழிலாளி தான் நுகர்வதைத் திருப்பித் தோற்றுவித்துத் தருவதோடன்றி சேமிக்கப்பட்ட உழைப்புக்கு இதன் முன் அதனிடமிருந்ததைவிட கூடுதலான மதிப்பையும் அளித்திடும் ஆக்க சக்தியைப் பெறுகிறார்.''* முதலாளி தொழிலாளியின் படைப்புச் சக்தியைப் பெறுகிறார்; அதன் மூலம் தொழிலாளி தன்னைப் புனருற்பத்தி செய்வதுடன் மதிப்பை அதிகப்படுத்துகிறார் என்று மார்க்ஸ் தெளிவாகக் கூறுகிறார்.

மார்க்ஸ் தனக்கு முந்தியவர்களைப் போலன்றி மூலதனத்துக்குக் கூலியுழைப்பின் மெய்யான பரிவர்த்தனையை ஆராய்ந்தார். அவர் தொழிலாளியின் உழைப்புத் தகுதியைப் புனருற்பத்தி செய்கின்ற உழைப்புக்கும் மதிப்பைப் படைக்கின்ற உழைப்புக்கும் இடையில் வேறுபடுத்திப்பார்ப்பதற்கு அது உதவியளித்தது. தொழிலாளியின் உழைப்புத் தகுதியைப் புனருற்பத்தி செய்கின்ற உழைப்பின் மதிப்புக்குக் கூலி கொடுக்கின்ற பொழுது முதலாளிக்கு மதிப்

* அதே நூல், பக்கங்கள் 45—46.

பைப் படைத்து அதிகப்படுத்துகின்ற உழைப்பும் கிடைக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டத்தின் மதிப்புக்கும் பயன் மதிப்புக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது. மேலும் மார்க்ஸ் சமத்துவப் பரிவர்த்தனையின் சுற்றுவட்டத்துக்குள், அதாவது மதிப்பு விதியின் அடிப்படையில் உபரி மதிப்பு உற்பத்தியின் பொறியமைவை உருவரையாக அளித்தார். அவருடைய பிந்திய கால சொற்பிரயோகத்தின்படி கூலித் தொழிலாளியின் உழைப்பு, அவன் சுரண்டப்படுதல் மூலதனத்தின் அதிகரிப்புக்கு, உபரி மதிப்புக்குத் தோற்றுவாயாக இருக்கிறது.

மார்க்சின் **கூலியுழைப்பும் மூலதனமும்** நூலைப் பற்றி பூர்ஷ்வாப் பொருளியலாளர்களின் கருத்துகளை மறுப்பதற்கு இது மிகவும் முக்கியமாகும். டேவிட் ரிக்கார்டோவைப் போல மார்க்சும் **கூலியுழைப்பும் மூலதனமும்** நூலில் முதலாளியின் லாபம் எங்கிருந்து வருகிறது என்னும் முக்கியமான கேள்விக்குப் பதிலளிக்கத் தவறுகிறார் என்று பீட்டர் ஸிங்கர் என்னும் பொருளியலாளர் கூறுகிறார்.*

உண்மை என்னவென்றால் மார்க்ஸ் தன்னுடைய **கூலியுழைப்பும் மூலதனமும்** நூலில் முதலாளியின் லாபத்தின் தோற்றுவாயைச்

---

* See: P. Singer, *Marx*, Oxford, Oxford University Press, 1980, p. 49.

சுட்டிக் காட்டுகிறார். முதலாளி பரிவர்த்தனைச் செயலின் போது தொழிலாளியின் உற்பத்திச் சக்தியை, படைப்புச் சக்தியை, உழைப்புத் தகுதியை விலைக்குப் பெறுகிறார். அது முதலாளித்துவ உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுவதால் தொழிலாளி தன்னுடைய உழைப்புத் தகுதியைப் புனருற்பத்தி செய்வதற்கு அவசியமான மதிப்பைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்கிறார். மார்க்ஸ் **கூலியுழைப்பும் மூலதனமும்** நூலை எழுதிக் கொண்டிருந்த பொழுது உபரி மதிப்பு எங்கிருந்து கிடைக்கிறது, எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது என்பவற்றை ஏற்கெனவே அறிந்திருந்தார் என்று **மூலதனம்** நூலின் 2ஆவது தொகுதியின் முன்னுரையில் எங்கெல்ஸ் எழுதியிருக்கிறார். ''மறு பக்கத்தில் மார்க்ஸ் ஏற்கெனவே அந்தக் காலத்தில் ராட்பெர்ட்டசின் உதவியின்றி 'முதலாளியின் உபரி மதிப்பு' எங்கிருந்து கிடைக்கிறது என்பதை மட்டுமன்றி எப்படிக் கிடைக்கிறது என்பதையும் மிகவும் நன்றாக அறிந்திருந்தார் என்பதை அவர் 1847இல் எழுதிய **மெய்ஞானத்தின் வறுமை** நூல் மற்றும் அதே ஆண்டில் அவர் பிரஸ்ஸெல்சில் நிகழ்த்திய கூலியுழைப்பும் மூலதனமும் பற்றிய சொற்பொழிவுகள் நிரூபிக்கின்றன'' என்று எங்கெல்ஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.*

ஆகவே மார்க்ஸ் தன்னுடைய மூன்றாவது

---

* K. Marx, *Capital*, vol. 2, p. 7.

சொற்பொழிவில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையான உற்பத்தி உறவின் சாராம்சத்தைப் பற்றி, முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களுடைய நலன்களின் முரணியல்பைப் பற்றி, கூலியுழைப்பு என்பது மூலதனத்தின் இயக்கவியல் எதிர்நிலை என்னும் சாராம்சத்தைப் பற்றித் தொழிலாளர்களிடம் பேசினார். மார்க்ஸ் மூலதனத்தின் அர்த்தத்தை விளக்கியதுடன் கூலித் தொழிலாளி சுரண்டப்படுகின்ற முறையைப் பற்றிப் பொதுவான உருவரையையும் அளித்தார்.

கூலியுழைப்பும் மூலதனமும் நூல் — குறிப்பாக, அதன் மூன்றாவது கட்டுரை—விஞ்ஞான கம்யூனிசத்தைப் பொருளாதார ரீதியில் நிறுவுவதில் முக்கியமான கட்டத்தைக் குறிக்கிறது. தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டத்தின் இரண்டு இயல்புகளை மார்க்ஸ் அங்கே முதல் முறையாகச் சுட்டிக் காட்டினார். அவர் பிறகு எழுதிய மூலதனம் நூலிலும் பொருளாதாரக் கையேடுகளிலும் அவற்றை விரிவுபடுத்தி எழுதினார்.

சூக்குமமான உழைப்பு மதிப்பைப் படைக்கிறது, ஸ்தூலமான உழைப்பு பயன் மதிப்பைப் படைக்கிறது என்று மார்க்ஸ் 1857—1858ஆம் ஆண்டுகளின் பொருளாதாரக் கையேடுகளில் எழுதினார்; ஆகவே அவர் மதிப்புக்கும் பயன் மதிப்புக்கும் இடையில் தெளிவாக வேறுபடுத்திக் காட்டினார். உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள உறவைப்

புரிந்து கொள்வதற்கு அது அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அந்த உறவின் தனித்தன்மைகள் காரணமாக முதலாளி கொடுத்ததைக் காட்டிலும் அதிகமான மதிப்பைப் பெறுகிறார். ஆகவே மதிப்பு அதிகரிப்பது அவருக்குப் பயனுள்ள விளைவாக, அதாவது குறிப்பிட்ட பயன் மதிப்பாக இருக்கிறது. ஆனால் மதிப்பின் விதியின்படி, உழைப்பு பரிவர்த்தனைச் செயல்முறையின் போது அதிகரிக்க முடியாது; பரிவர்த்தனையில் மதிப்பின் வடிவம் மட்டுமே மாறுகிறது. ஆகவே கூலிக்கு உழைப்பைப் பரிவர்த்தனை செய்யும் பொழுது உயிருள்ள உழைப்பில் பண்டம் என்பது பயன் மதிப்பு மற்றும் மதிப்பின் ஒருமை என்னும் அடிப்படையான குணாம்சம் இல்லை. அதனால்தான் உழைப்பு மட்டும் பண்டமாக முடியாது. தொழிலாளி உழைப்பை விற்கவில்லை. ஆகவே ரிக்கார்டோ ஒருபோதும் வகுத்தளிக்காத பிரச்சினை எழுகிறது: தொழிலாளி முதலாளியிடம் எதை விற்பனை செய்கிறார்?

உழைப்பின் விற்பனையைப் பற்றிய கருதுகோளிலிருந்து தொடங்கிய டேவிட் ரிக்கார்டோ உபரி மதிப்பைப் பற்றி முரண்பாடு இல்லாத விளக்கத்தைக் கொடுப்பதற்குத் தவறினார். அவர் மதிப்பின் அளவுகோல் உழைப்பு என்பதைக் கண்டார். உயிருள்ள உழைப்பை மூலதனத்துக்குப் பரிவர்த்தனை செய்யும் பொழுது அது பரிவர்த்தனை செய்யப்படுகின்ற பொருள் வடிவிலான உழைப்பைக்

காட்டிலும் குறைவான மதிப்பைக் கொண்டிருக்கிறது. உயிருள்ள உழைப்பு உற்பத்தி செய்த பொருளின் மதிப்பு அந்த உழைப்பின் அளவின் மதிப்பைக் காட்டிலும் எப்பொழுதும் அதிகமாக இருக்கும். ''பிரச்சினையை இந்த வடிவத்தில் முன்வைத்தால் அது தீர்க்கப்பட முடியாததாக இருக்கிறது என்பது மெய்யே. அதை மார்க்ஸ் சரியான முறையில் வகுத்துக் கொடுத்தார்; ஆகவே பதிலளித்தார்'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

மார்க்ஸ் 1857—1858ஆம் ஆண்டுகளைச் சேர்ந்த பொருளாதாரக் கையேடுகளில், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையேயுள்ள பரிவர்த்தனையில் இரண்டு பண்பு ரீதியில் தனிவகையான, நேரெதிர் நடவடிக்கைகளை நிறுவினார். முதல் நடவடிக்கையில் தொழிலாளி ''தன்னுடைய பண்டத்தை, உழைப்பை, பயன் மதிப்பை... பரிவர்த்தனை மதிப்புகளின் குறிப்பிட்ட மொத்தத்துக்கு'' அளிக்கிறார்; அது பரிவர்த்தனை நடவடிக்கை ஆகும். இரண்டாவது நடவடிக்கையில் முதலாளி ''உழைப்பை, மதிப்பைப் படைக்கின்ற நடவடிக்கை என்ற முறையில் உழைப்பைப்'' பெறுகிறார்.** முதலாளி தன்னுடைய மூலதனத்தைப் பராமரிப்பதற்கும் அதிகப்படுத்துவதற்கும் உற்பத்தியின் மெய்யான நிகழ்வுப்

*K. Marx, *Capital*, vol. 2, p. 18.

** K. Marx, F. Engels, *Gesamtausgabe*, II/1. 1, S. 198.

போக்கில் அந்த நடவடிக்கையை உபயோகிக்கிறார். அந்த நடவடிக்கை பண்பு ரீதியில் பரிவர்த்தனையிலிருந்து தனிவகையானது. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான பரிவர்த்தனையின் இரண்டு எதிர்க்கட்டங்களில் வாய்ப்புவளம் என்ற முறையில் உழைப்புக்கும்—தொழிலாளி அதைப் பரிவர்த்தனைக்கு அளிக்கிறார்—மதிப்பைப் படைத்து அதிகப்படுத்துகின்ற செயல்முறை என்ற வகையில் உழைப்புக்கும் இடையில் வேறுபடுத்திக் காண்கிறார். இரண்டாவது ரகத்தைச் சேர்ந்த உழைப்புதான் முதலாளிக்குப் பயன் மதிப்பாக இருக்கிறது. ''மூலதனத்தை அதிகப்படுத்துவது, பன்மடங்காகப் பெருக்குவது, ஆகவே மூலதனம் என்ற முறையில் அதைப் பாதுகாப்பது மட்டுமே பயன் மதிப்பைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியும், அதாவது மூலதனத்துக்குப் பயனளிப்பதாக இருக்க முடியும்.''* உயிருள்ள உழைப்பு மட்டுமே இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறது. அதனால்தான் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''மூலதனத்துக்கும் உழைப்புக்கும் உள்ள உறவில்... ஒரு தரப்பு (மூலதனம்) மறுதரப்பை எல்லாவற்றுக்கும் மேலாகப் **பரிவர்த்தனை மதிப்பு** என்ற முறையில் எதிரிடுகிறது; மறு தரப்பு (உழைப்பு) மூலதனத்தைப் பயன் மதிப்பு என்ற முறையில் முக்கியமாக எதிரிடுகிறது.''** உழைப்பு என்

* *Ibid.*, S. 195.

** *Ibid.*, S. 190.

பது ஒரு பண்டமல்ல, தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டத்தின் பயன் மதிப்பாக மட்டுமே அது இருக்கிறது என்பதை மார்க்ஸ் இப்படி எடுத்துக்காட்டுகிறார்.

மூலதனத்துக்குப் பயன் மதிப்பாக உள்ள உயிருள்ள உழைப்பு உயிருள்ள நபரிடம் மட்டுமே இருக்க முடியும். அதன் சாதனம் தொழிலாளி, அது ''தொழிலாளியின் பொருளாதார குணாம்சமாக'' இருக்கிறது என்று மார்க்ஸ் வலியுறுத்தினார்.* மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் விற்பனையின் குறிப்பொருளின் பயன் மதிப்பைப் பகுப்பாய்வு செய்கின்றபொழுது அது எந்தப் பொருளிலும் பொருண்மையாக்கப்படவில்லை, அது தொழிலாளிக்கு வெளியே இருக்க முடியாது, ஆகவே அது ''திறமையாக, உடல் தகுதியாக மட்டுமே இருக்கிறது''**, மூலதனம் அதை இயக்குகின்றபொழுது எதார்த்தமாக மாறுகிறது என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டத்தை வரையறுப்பதில் மார்க்ஸ் இப்பகுப்பாய்வில் முக்கியமான அடியெடுத்து வைத்தார்.

பண்ட உழைப்புச் சக்தி குறித்து மார்க்சின் வரையறுப்பின் பரிணாமத்தை ஆராய்வது பலனுள்ளதாகும். அவர் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உற்பத்தி உறவை

---

* *Ibid.*, S. 217.

** *Ibid.*, S. 205.

ஆராய்கின்ற பொழுது தொழிலாளி விற்பனை செய்த பண்டத்தின் சாராம்சத்தைத் துல்லிய மாகப் பிரதிபலிக்கின்ற சொற்களைத் தேடு கிறார். அதைத் தொழிலாளியின் உழைப்புச் சக்தி, வாழ்க்கை நடவடிக்கை, உழைப்பின் மீதான அதிகாரம், உழைப்புத் தகுதியின் மீது தற்காலிகமான அதிகாரம், படைப்புச் சக்தி, அவருடைய சக்தியின் வெளிப்பாட்டின் திட்ட வட்டமான, பிரத்யேகமான அளவுகோல் மற்றும் உழைப்புத் தகுதி என்று பலவாறாக வர்ணிக்கிறார். பொருளாதாரக் கையேடு களின் இரண்டாம் பகுதியில் தொழிலாளி முத லாளிக்கு விற்பனை செய்கின்ற பண்டத்தை உழைப்புச் சக்தி என்று மார்க்ஸ் தெளிவாக வரையறுக்கிறார்.

உழைப்புச் சக்தி பண்டமாக மாறுதல் பண் டப் பரிவர்த்தனையின் மிக உயர்ந்த வளர்ச்சி யைக் குறிப்பதாக மார்க்ஸ் எடுத்துக்காட்டு கிறர். முதலாளித்துவ சமூகத்தின் தோற்றத் துக்கு முந்திய கட்டங்களில் குறிப்பிட்ட பண் டங்கள் மட்டுமே பரிவர்த்தனை செய்யப் பட்டன, உற்பத்தி பரிவர்த்தனையை அடிப் படையாகக் கொண்டிருக்கவில்லை. பண்ட உழைப்புச் சக்தியின் தோற்றம் பண்டப் பரி வர்த்தனை உறவுகளைப் புரட்சிகரமாக்கியது. மார்க்ஸ் அதைப் பின்வருமாறு விளக்குகிறார். மூலதனத்தை உழைப்புக்கு நேரடியாகப் பரி வர்த்தனை செய்ய முடியாது; உழைப்புச் சக்தி யிலடங்கிய உழைப்பு நேரத்துக்குத்தான்

அதைப் பரிவர்த்தனை செய்ய முடியும். முதலாளி பெறுகின்ற உழைப்பு நேரம் உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்ல, அதன் பயன் மதிப்பு ஆகும். அப்பயன் மதிப்பு மதிப்பைப் படைப்பதில் ஒரு அங்கமாக இருக்கிறது, அதாவது பொருள் வடிவமாக்கப்பட்ட உழைப்பு நேரத்தின் சமமதிப்புக்குப் பரிவர்த்தனையாக முதலாளி மதிப்பைப் படைக்கின்ற, அதைப் பன்மடங்கு பெருக்குகின்ற உயிருள்ள உழைப்பு நேரத்தைப் பெறுகிறார். இப்பரிவர்த்தனையின் விளைவாக முதலாளி உழைப்புச் சக்திக்குச் செலவிடப்பட்ட உழைப்பு நேரத்தைக் காட்டிலும் அதிகமான உழைப்பு நேரத்தை எந்த சமமதிப்பும் அளிக்காமல் பெறுகிறார். பரிவர்த்தனை உறவுகளில் ஏற்பட்டுள்ள புரட்சியின் சாராம்சம் இதுவே. ''மதிப்பு என்ற முறையில் உழைப்புச் சக்தியின் பயன் மதிப்பு, மதிப்பைப் படைக்கின்ற சக்தியின் கூறாக, மதிப்பின் பொருளாக, மதிப்பைப் பெருக்குகின்ற பொருளாக இருக்கிறது என்னும் உண்மையிலிருந்து இப்புரட்சி எழுகிறது'' என்று மார்க்ஸ் கூறுகிறார்.*

மார்க்ஸ் மூலதனம் நூலில் தொழிலாளி விற்பனை செய்கின்ற பண்டத்தை இன்னும் அதிக நுணுக்கமாக ஆராய்கிறார். கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்பை அல்ல, உழைப்புச் சக்தியை ஏன் விற்பனை செய்

* *Ibid.*, S. 556.

கிறார் என்பதை அவர் விளக்குகிறார்; அவர் பண்ட உழைப்புச் சக்தியின் மதிப்பு மற்றும் பயன் மதிப்பின் தனித் தன்மைகளைத் தனிப் பிரித்துக்காட்டி ஆழப்படுத்துகிறார்.

உழைப்புச் சக்தியின் பயன் மதிப்பு அந்த உழைப்புச் சக்தியின் மதிப்பைக் காட்டிலும் அதிகமான மதிப்பை அல்லது உபரி மதிப்பைப் படைக்கக் கூடிய திறமையில் அடங்கியிருக் கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால், கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியின் செலவைப் புனருற்பத்தி செய்வதற்கு அவசியமான பிழைப்புச் சாதனங் களின் மதிப்பை ஈடு செய்வதற்கு வேலை நாளில் ஒரு பகுதி, அதாவது அவசியமான உழைப்பு நேரம் மட்டும் போதுமானதாகும். வேலை நாளின் அந்தப் பகுதிக்கு அவர் கூலி பெறுகிறார். அவர் உபரி உழைப்பு நேரத்தின் போது படைக்கின்ற மதிப்பை முதலாளி கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்கிறார்.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடை யில் ''நியாயமான'' ஒப்பந்தம் முடிவு செய்யப் பட்ட பிறகு உள்ள நிலைமையை மார்க்ஸ் தத்ரூபமாகச் சித்திரிக்கிறார். ''முன்பு பணத் தின் உடைமையாளராக இருந்தவர் இப் பொழுது முதலாளியாக முன்னே நடக்கிறார்; உழைப்புச் சக்தியின் உடைமையாளர் அவரு டைய தொழிலாளி என்ற முறையில் அவரைப் பின்தொடர்கிறார். ஒருவர் நான் முக்கியமான வன் என்ற தோரணையில் இளித்துக் கொண்டு

காரியத்தில் கவனமாக நடக்கிறார்; அடுத்த வர் அஞ்சியபடியே தன்னுடைய தோலை சந்தைக்கு கொண்டுவருபவரைப் போல, கசை யடியைத் தவிர மற்றெதையும் எதிர்பார்க் காதவரைப் போல பின்னால் மறைந்து வரு கிறார்.''*

மற்ற எல்லாப் பண்டங்களையும் போல பண்டம் என்ற முறையில் உழைப்புச் சக்தியின் பயன் மதிப்பு நுகர்வுச் செயல்முறையின் போது வெளிப்படுகிறது. ஆனால் மற்ற பண் டங்களில் நடப்பதைப் போல உழைப்புச் சக்தி நுகர்வுச் செயல்முறையின் போது மறைந்து விடுவதில்லை. ''உழைப்புச் சக்தியின் நுகர்வு அதே சமயத்தில் பண்டங்கள் மற்றும் உபரி மதிப்பின் உற்பத்தியாகவும் இருக்கிறது.''** உழைப்புச் சக்தி செயல்படும் பொழுது அது மதிப்பைப் படைக்கிறது, உழைப்புச் சக்தியின் மதிப்பைக் காட்டிலும் அதிகமான மதிப்பைப் படைக்கிறது என்பது மெய்யே. ஆகவே மார்க்ஸ் கூர்மையான விஞ்ஞான ஆராய்ச்சி யின் மூலம் முதலாளித்துவச் சுரண்டல் முறை யின் இரகசியத்தை அம்பலமாக்குகிறார், முதலாளி வர்க்கத்தின் செல்வப் பெருக்கின் தோற்றுவாயை வெளிக்காட்டுகிறார், மதிப்பு விதியின் அடிப்படையில் உபரி மதிப்பின்

---

* K. Marx, *Capital*, vol. 1, p. 172.

** *Ibid.*

உருவாக்கத்தின் பொறியமைவை எடுத்துக் காட்டுகிறார்.

பண்ட உழைப்புச் சக்தியைக் கண்டுபிடித்த பிறகு மார்க்ஸ் மூலதனத்தின் தோற்றத்துக்கு வேறுவிதமான அணுகுமுறையைப் பின்பற்று கிறார். பண்டச் செலாவணி மற்றும் பணச் செலாவணியின் இருத்தலும் வளர்ச்சியும் மூல தனத்தின் இருத்தலுக்கு இன்னும் போதுமான தாக இருக்கவில்லை என்பதை அவர் வலியு றுத்துகிறார். ''உற்பத்திச் சாதனங்கள் மற்றும் பிழைப்புச் சாதனங்களின் உடைமையாளர் சந்தையில் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்கின்ற சுதந்திரத் தொழி லாளியைச் சந்திக்கின்ற பொழுது மட்டுமே மூலதனம் உயிர் பெற முடியும். இந்த ஒரு வரலாற்று நிபந்தனையில் ஒரு உலக வரலாறு அடங்கியிருக்கிறது. ஆகவே மூலதனம் முதலில் தோன்றும் பொழுதே சமூக உற்பத்திச் செயல் முறையில் புதிய சகாப்தம் தோன்றி விட் டதை அறிவிக்கிறது.''*

* *Ibid.*, p. 167.

## மூலதனத் திரட்சியும் தொழிலாளி வர்க்கத்தின் நிலையின் மீது அதன் தாக்கமும்

மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலின் நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டுரைகளில் உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சியின் சாராம்சத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் நிலைமையின் மீது அதன் தாக்கத்தையும் விளக்குகிறார்.

உற்பத்தித் திறனுள்ள மூலதனம் வளர்ச்சியடைகின்ற பொழுது கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது; ஆகவே மூலதனத்தின் ஆதிக்கம் இன்னும் அதிகமான நபர்கள் மீது விஸ்தரிக்கப்படுகிறது. ஆனால் மூலதனம் வளர்ச்சியடைகின்ற பொழுது சில சமயங்களில் அந்த நிலைமை தொழிலாளர்களுக்கு சாதகமாக இருப்பதைப் போலத் தோன்றும்; மூலதனம் வளர்ச்சியடைகின்ற பொழுது உழைப்புத் தேவையும் அதிகரிக்கிறது, ஆகவே தொழிலாளர் கூலி உயர்கிறது. ஆனால் அத்தகைய கூலி உயர்வு தொழிலாளியின் நிலைமையில் அபிவிருத்தியைக் குறிக்குமா? அக்கூலி உயர்வுக்குப் பின்னாலுள்ள மெய்யான நிலைமை என்ன?

முதலாவதாக, மார்க்ஸ் பெயரளவுக் கூலிக்கும் உண்மைக் கூலிக்கும் இடையில் வேறுபாடு

காண்கிறார். பெயரளவுக் கூலி அல்லது முத லாளியுடன் பரிவர்த்தனையில் தொழிலாளர் களுக்குக் கிடைக்கின்ற கூலி உண்மையான கூலி யுடன் பொருந்தவில்லை. பெயரளவுக் கூலி யைக் கொண்டு உண்மையாகவே வாங்கக் கூடிய பண்டங்களின் அளவை உண்மையான கூலி எடுத்துரைக்கிறது. மார்க்ஸ் இதை விளக்கு வதற்குச் சில உதாரணங்களைத் தருகிறார்.

உதாரணமாக, 16ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் வளமான, எளிதில் வெட்டி யெடுக்கக் கூடிய தங்கம், வெள்ளிச் சுரங்கங் கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக ஐரோப்பாவில் செலாவணியிலிருந்த தங்கம், வெள்ளியின் அளவு அதிகரித்தது. ஆகவே மற்ற பண்டங்களின் மதிப்பைப் பொறுத்த மட்டில் தங்கம், வெள்ளியின் மதிப்பு குறைந் தது. தொழிலாளர்கள் முன்பு பெற்ற அதே பெயரளவுக் கூலியைப் பெற்றபடியால் அவர் களுடைய உண்மையான கூலிகள் குறைந்தன. ஏனென்றால் அவர்கள் அதே அளவு பணத் துக்குத் தற்பொழுது குறைந்த அளவு பண்டங் களை வாங்கினார்கள்.

மற்றொரு உதாரணத்தைக் காண்போம். 1847இல் அறுவடை மோசமாக இருந்தபடி யால் மிகவும் இன்றியமையாத பண்டங்களின் விலைகள் கணிசமாக அதிகரித்தன. தொழி லாளர்கள் முன்பு பெற்ற அதே அளவு பணத் தைப் பெற்றார்கள் என்றால் அவர்களுடைய உண்மையான கூலி குறைந்துவிடும், அதாவது

அதே அளவு பணத்தைக் கொண்டு அவர்கள் குறைவான பண்டங்களை வாங்கினார்கள்; ஏனென்றால் பண்டங்களின் மதிப்பு அதிகரித்து விட்டது.

முடிவாக, புதிய இயந்திரங்களை உபயோகிப்பதன் விளைவாக விவசாயப் பொருட்கள், தொழில்துறைப் பொருட்களின் விலைகள் குறைகின்றன, தொழிலாளி முன்பு போல அதே அளவு பணத்தைப் பெறுகிறார் என்றால் அவருடைய உண்மையான கூலி அதிகரிக்கிறது. ஏனென்றால் அவர் அதே அளவு பணத்தைக் கொண்டு இப்பொழுது அதிகமான பண்டங்களை வாங்க முடியும். ஆகவே பெயரளவுக் கூலி உண்மையான கூலியுடன் பொருந்தவில்லை. கூலி உயர்வைப் பற்றிப் பேசுகின்ற பொழுது பெயரளவுக் கூலியை மட்டுமன்றி உண்மையான கூலியையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் தொழிலாளர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

பெயரளவுக் கூலி மற்றும் உண்மையான கூலியின் இயக்கத்தைப் பற்றி மார்க்சின் கருதுகோள் இன்றும் பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது. இன்றைய முதலாளித்துவத்தின் நிலைமையில் தொழிலாளர்களுடைய இடைவிடாத வர்க்கப் போராட்டத்தின் பலனாக பெயரளவுக் கூலி உயர்கிறது. ஆனால் அது நுகர்வுப் பொருட்கள், சேவைகளின் விலைகள் மற்றும் வரிகள் உயர்கின்ற வேகத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது மெதுவாகவே உயர்கிறது. அதன்

காரணமாக உண்மையான கூலிகள் குறைகின்றன (பின்வரும் அட்டவணையைப் பார்க்க).

**அமெரிக்காவில் விலைகளின் குறியீட்டெண் மற்றும் தொழில்துறைக் கூலிகள் (1967=100)**

| ஆண்டு | நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளின் குறியீட்டெண் | தொழில்துறையில் வாரக் கூலி | |
|---|---|---|---|
| | | பெயரளவுக் கூலி | உண்மையான கூலி |
| 1977 | 181.5 | 187.0 | 103.0 |
| 1978 | 195.4 | 198.9 | 101.8 |
| 1979 | 217.4 | 213.9 | 98.4 |
| 1980 | 246.8 | 225.0 | 91.1 |
| 1981 | 267.8 | 238.5 | 89.0 |

1980க்களில் உழைக்கும் மக்களின் உண்மையான வருமானங்கள் பணவீக்கத்தில் சிக்குவது குறையாமல் தொடர்ந்தது. 1980—1982இல் தயாரிப்புத் தொழிலில் ஒரு மணிக்குத் தரப்பட்ட உண்மையான கூலி அமெரிக்காவில் 4.5 சதவிகிதமும் பிரிட்டனில் 4.2 சதவிகிதமும் மேற்கு ஜெர்மனியில் 0.7 சதவிகிதமும் குறைந்தது. ஆகவே வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் விலை உயர்வுக்குத் தகுந்த முறையில் கூலி உயர்வுக்கும் வரிச் சுமையைக் குறைப்பதற்கும் தீவிரமான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

பெயரளவுக் கூலியோ, உண்மையான கூலியோ பொருளாதார வகையினம் என்ற முறையில் கூலியில் அடங்கியுள்ள எல்லா உறவுகளையும் தீர்த்துவிடவில்லை என்பதை மார்க்ஸ் வலியுறுத்துகிறார். அவர் மற்றொரு முக்கியமான குறியீட்டைச் சுட்டிக் காட்டுகிறார்: கூலிக்கும் முதலாளியின் லாபத்துக்கும் உள்ள உறவு அல்லது **சார்புநிலைக் கூலி.** இந்த முக்கியமான பொருளாதார வகையினத்தின் அர்த்தத்தை விளக்குவதற்கு மார்க்ஸ் ஓர் உதாரணத்தை சுட்டிக் காட்டுகிறார். தொழிலாளியின் பிழைப்புச் சாதனங்களின் விலை மூன்றிலிரண்டு பங்கு குறைந்திருப்பதாகவும் கூலி மூன்றில் ஒரு பங்கு, அதாவது நாள் கூலி 3 பிராங்குகள் என்பது 2 பிராங்குகளாகக் குறைந்திருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். தொழிலாளி தனக்கு இப்பொழுது தரப்படுகின்ற 2 பிராங்குகளைக் கொண்டு முன்பு 3 பிராங்குகளுக்கு வாங்கியதைக் காட்டிலும் அதிகமான அளவில் பண்டங்களை வாங்க முடியும் என்ற போதிலும் முதலாளியின் லாபத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது அவருடைய கூலி குறைந்திருக்கிறது. முதலாளியின் லாபம் ஒரு பிராங்க் அதிகரித்திருப்பதால் முதலாளி தொழிலாளிக்குத் தருகின்ற பணத்தின் அளவு குறைகிறது என்றாலும் தொழிலாளி முன்னைக் காட்டிலும் அதிகமான மதிப்பை உற்பத்தி செய்ய வேண்டும். ஆகவே கடைசி மதிப்பில் தொழிலாளியின் பங்குடன் ஒப்பிடுகின்ற

பொழுது முதலாளியின் பங்கு அதிகரிக்கிறது.

மார்க்சுக்கு முன்னர் டேவிட் ரிக்கார்டோ சார்புநிலைக் கூலியைப் புரிந்து கொண்டிருந் தார். எனினும் அவர் பொருளாதார வகை யினங்களைப் பற்றி வரலாற்று அணுகுமுறை யைப் பின்பற்றவில்லை. மேலும் அவரிடமிருந்த வர்க்க வரையறைகள் மார்க்ஸ் வந்தடைந்த முடிவுகளுக்கு அவர் வர முடியாதபடி தடுத் தன.

தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் சமூகச் செல்வம் மேன்மேலும் அதிக மாக சமத்துவமற்ற முறையில் வினியோகிக் கப்படுவதை சார்புநிலைக் கூலி பிரதிபலிக் கிறது என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். தொழிலாளியின் உழைப்பின் பங்குடன் ஒப்பிடு கின்ற பொழுது மூலதனத்தின் பங்கு அதிகரிக் கின்ற பொழுது சார்புநிலைக் கூலி குறை கிறது. முதலாளி அதே அளவு மூலதனத்தைக் கொண்டு அதிகமான அளவு உழைப்பை பெறு கிறார். தொழிலாளி வர்க்கத்தின் மீது முத லாளிகளின் ஆதிக்கச் சக்தி அதிகரிக்க முற்படு கிறது.

மார்க்ஸ் கூலி மற்றும் லாபத்துக்கு இடையில் உறவு நிலையின் பொது விதியை வகுத்துத் தரு கிறார். கூலியும் லாபமும் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று எதிர்மறை விகிதத்தில் இருக் கின்றன. கூலி குறைகின்ற அளவுக்கு லாபம் அதிகரிக்கிறது.

லாபம் வேகமாக அதிகரிக்கின்ற பொழுது

மூலதனம் வேகமாக அதிகரிக்க முடியும். சார்பு நிலைக் கூலி வேகமாகக் குறைகின்ற பொழுது மட்டுமே லாபம் வேகமாக அதிகரிக்க முடியும். பெயரளவிலான கூலியுடன் உண்மையான கூலி ஒரே சமயத்தில் அதிகரித்தால் கூட சார்பு நிலைக் கூலி குறைய முடியும் என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். உதாரணமாக, கூலி 5 சதவிகிதமும் லாபம் 30 சதவிகிதமும் அதி கரிக்குமானால் சார்புநிலைக் கூலி அதிகரிப் பதற்கு பதிலாகக் குறையவே செய்யும். எனவே மூலதனத்தின் வேகமான வளர்ச்சியுடன் சேர்ந்து தொழிலாளியின் வருமானம் அதிக ரிக்க முடியும் மற்றும் அவருடைய பொரு ளாயத நிலை அபிவிருத்தியுறும் என்ற போதி லும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடை யிலுள்ள சமூகப் பிளவு விரிவடைகிறது. கூலித் தொழிலாளி மூலதனத்தைச் சார்ந்திருந்தல், கூலியுழைப்பின் மீது மூலதனத்தின் ஆதிக்கச் சக்தி அதற்குத் தகுந்தவாறு அதிகரிக்கிறது. தொழிலாளி வர்க்கம் தன்னை ஆட்சி செய் கின்ற சக்தியை, தனக்குச் சொந்தமில்லாத செல்வத்தை அதிகப்படுத்துமாறு நிர்ப்பந்திக் கப்படுகிறது. ''தொழிலாளி வர்க்கம் தனக்குப் பகையான சக்தியை, தனக்குச் சொந்தமாயில் லாமல் தன் மீது ஆதிக்கம் புரியும் செல்வத்தை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கச் செய்து பெருக்குகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு சாதகமான நிலைமைகளில் கூலியுழைப்பு புதி தாய் முதலாளித்துவச் செல்வத்தை அதி

கரித்துச் செல்வதற்கு, மூலதனத்தின் ஆதிக்கத்தை ஓங்கச் செய்வதற்கு, முதலாளி வர்க்கம் அதற்குக் கட்டுப்போட்டு தன்னுடன் இழுத்துச் செல்லப் பயன்படுத்தும் தங்கச் சங்கிலிகளைக் கூலியுழைப்பு தனக்குத் தயாரித்துக் கொள்வதோடு திருப்தியடைவதற்கு அனுமதிக்கப்படுகிறது என்று கூறுவதாகுமே அன்றி வேறல்ல.''*

மார்க்ஸ் நான்காவது கட்டுரையில் வகுத்தளித்த சார்புநிலைக் கூலிக் கருதுகோள் நடைமுறை, தத்துவம்ஆகிய இரண்டுக்கும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

பாட்டாளி வர்க்கம் மற்றும் முதலாளி வர்க்கத்தின் எதிரெதிரான வர்க்க நலன்கள் இருப்பது புறவயமான நிகழ்வு என்று மார்க்ஸ் தொழிலாளர்களிடம் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகிறார். கூலித் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்டுள்ள ''தங்கச் சங்கிலிகளை'' நொறுக்குவதன் மூலமாக மட்டுமே உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான அப்பட்டமான பகை முரண்பாடுகளைத் தீர்க்க முடியும்.

சார்புநிலைக் கூலி என்பது முதலாளியின் லாபத்துடன் கூலியின் உறவை எடுத்துக்காட்டுகிறது. புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பில் தொழிலாளியின் பங்கு கூலியுழைப்பு சுரண்டப்படுகின்ற அளவைப் பொறுத்திருப்பதை அது

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 58.

வெளியிடுகிறது. சுரண்டலின் அளவு அதிகமாக இருக்கின்ற அளவுக்கு சார்புநிலைக் கூலி குறைவாக இருக்கும். சார்புநிலைக் கூலியின் உள்ளடக்கத்தை எடுத்துக்காட்டும் பொழுது மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்தின் சார்புநிலை க்ஷீணமடைதல் இருப்பதை நடைமுறையில் சுட்டிக் காட்டுகிறார். பின்னால் சொல்லப்பட்டது முதலாளித்துவ சமூகத்தில் மேன்மேலும் அதிகமான சமூக ஏற்றத்தாழ்வை நோக்கிய போக்கைப் பிரதிபலிக்கிறது; தேசிய செல்வத்தில், மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் மற்றும் தேசிய வருமானத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கு குறைவதில் அது வெளிப்படுகிறது.

முதலாளித்துவ அரசாங்கப் புள்ளி விவரங்கள் தேசிய வருமானத்தில் தொழிலாளர்களின் பங்கைப் பற்றிய உண்மையை மூடிமறைக்கின்றன. உயர் நிலை நிர்வாக அதிகாரிகள் கூலித் தொழிலாளர்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். முதலாளி வர்க்கத்தின் வருமானங்களின் மெய்யான அளவுகள் பலவாறாக மூடி மறைக்கப்படுகின்றன. ஆனால் பாட்டாளி வர்க்கம் சார்புநிலையில் க்ஷீணமடைவதைக் கூலிக்கும் சேர்க்கப்பட்ட மதிப்புக்கும் இடையிலுள்ள விகிதம் எடுத்துக்காட்டுகிறது. அமெரிக்காவின் தயாரிப்புத் தொழில்துறையில் அந்த விகிதம் 1940க்களில் 40 சதவிகிதமாக இருந்து 1970க்களில் 29.9 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.

பாட்டாளி வர்க்கம் சார்புநிலையில் க்ஷீண மடைவதைத் தேசிய செல்வத்தில் உழைக்கும் மக்களின் பங்கு குறைவது எடுத்துரைக்கிறது. தேசிய செல்வம் மக்கள் தொகையில் மேன் மேலும் குறைந்த பகுதியினரிடம் மேன்மேலும் அதிகமாகக் குவிகிறது. ஒரு சில கோடீசுவரக் குடும்பங்களுக்கும் பெருந்திரளான கூலித் தொழிலாளர்களுக்கும் இடையிலுள்ள பிளவு மேன்மேலும் விரிவடைகிறது.

உதாரணமாக, அமெரிக்காவின் செல்வந் தர் குடும்பங்களான 1 சதவிகிதத்தினர் அசை யாச் சொத்துகளில் 14 சதவிகிதத்தையும் கம் பெனிப் பங்குகளில் பாதிக்கு மேற்பட்ட பங்கு களையும் வைத்திருக்கிறார்கள்; மக்கள் தொ கையில் 5 சதவிகிதத்தினரிடம் தேசிய செல் வத்தில் 53 சதவிகிதம் இருக்கிறது. பிரான்சில் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதியின ரிடம் தேசிய செல்வத்தில் 60 சதவிகிதம் இருக் கிறது; அதே சமயம் மக்கள் தொகையில் கால் பகுதியினரிடம் தேசிய வருமானத்தில் 8 சதவிகிதம் மட்டுமே இருக்கிறது. பிரிட்டனில் மக்கள் தொகையில் 1 சதவிகிதத்தினரிடம் தேசிய செல்வத்தில் கால் பங்குக்கும் அதிக மாக இருக்கிறது.

மார்க்ஸ் ஐந்தாவது கட்டுரையில் உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சியையும் கூலி யின் மீது அதன் தாக்கத்தையும் தொடர்ந்து ஆராய்கிறார்.

மூலதனம் வளர்ச்சியடைகின்ற பொழுது

முதலாளிகளின் எண்ணிக்கையும் அவர்களுடைய மூலதனத்தின் அளவும் அதிகரிக்கின்றன; அவர்களுக்கு மத்தியில் போட்டியும் ஓங்குகிறது. முதலாளிகள் லாப வேட்டையில் மற்றும் ஒருவருக்கொருவர் தீவிரமான போராட்டத்தில் தங்களுடைய உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்குப் பாடுபடுகிறார்கள். அவர்கள் சர்வாம்ச ரீதியிலும் தொடர்ச்சியாகவும் இயந்திரங்களை அபிவிருத்தி செய்தும் உழைப்புப் பிரிவினையை அதிக அளவில் அமுலாக்கியும் அதைச் சாதிக்கிறார்கள்.

மூலதனத் திரட்சியும் குவிப்பும்—அது அதிகமான உழைப்புப் பிரிவினைக்கும் புதிய இயந்திரங்களைப் புகுத்துதலுக்கும் இட்டுச் செல்கிறது — கூலியின் மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

முதலாளி மேன்மேலும் அதிகமான உழைப்புப் பிரிவினையைப் புகுத்துவதால் ஒரு தொழிலாளி பலருடைய வேலையைச் செய்ய முடிகிறது; அது தொழிலாளர்கள் மத்தியில் போட்டியைத் தீவிரப்படுத்துகிறது. ''தொழிலாளி ஒரே மாதிரியான எளிய உற்பத்திச் சக்தியாய் மாற்றப்பட்டு விடுகிறார்'' என்று மார்க்ஸ் எழுதுகிறார்.* அவருடைய உழைப்பு எந்த நபரும் செய்யக் கூடிய உழைப்பாக மாறுகிறது. அது தொழிலாளர்கள் மத்தியில் போட்டியை அதிகப்படுத்துவதற்கு உதவுகிறது. அப்

---

* அதே நூல், பக்கம் 65.

போட்டியின் விளைவாகக் கூலிகள் குறைக்கப் படுகின்றன.

புதிய இயந்திரங்கள் தொழிலாளர்களின் நிலைமையின் மீது அதிக பாதகமான, பரந்த தாக்கத்தைச் செலுத்துகின்றன. புதிய இயந் திரங்களைப் புகுத்துவதனால் தேர்ச்சியுள்ள தொழிலாளர்களுக்குப் பதிலாகத் தேர்ச் சியற்ற தொழிலாளர்களை, ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களை, வயது வந்தவர் களுக்குப் பதிலாகச் சிறுவர்களை உபயோகிக்க முடியும். இயந்திரங்களை அபிவிருத்தி செய் யும் பொழுது தொழிலாளர்களின் மொத்தக் குழுக்களுமே வேலையிழக்கின்றன.

புதிய இயந்திரங்களை உபயோகிப்பதால் ஒரு தொழில்துறையில் வேலையிழந்த தொழி லாளர்கள் பிற தொழில்துறைகளில் புதிய வேலைகளைப் பெறுவார்கள் என்னும் கருத் தையும் மார்க்ஸ் நிராகரிக்கிறார். ஈடு செய் கின்ற தத்துவம் என்னும் பெயர் கொண்ட இத் தத்துவத்தை மார்க்ஸ் மூலதனம் நூலில் அதிக நுணுக்கமாக விமர்சனம் செய்கிறார்.* ஆனால் கூலியுழைப்பும் மூலதனமும் நூலில் தொழிலாளர்கள் சில துறைகளில் இழந்த வேலைகளை மற்ற துறைகளில் ''ஈடு செய் வதைத்'' தடுக்கின்ற திட்டவட்டமான சந்தர்ப் பங்களைச் சுட்டிக் காட்டுகிறார். முதலாவ

* K. Marx, *Capital*, vol. 1, pp. 598-600.

தாக, வேலையிழந்த எல்லாத் தொழிலாளர்களுக்கும் புதிய துறைகளில் வேலை கிடைக்காது; ஏனென்றால் இயந்திரங்கள் இப்புதிய துறைகளிலும் தொழிலாளர்களை வேலையிலிருந்து அகற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் சமூகத்தின் உயர் அடுக்குகளிலிருந்து நபர்கள் பாட்டாளி வர்க்கத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். பெரிய மூலதனத்தின் மூர்க்கமான போட்டியைத் தாங்கிக் கொள்ள முடியாத சிறு தொழிலதிபர்களும் வாடகை வருமானக்காரர்களும் கூலித் தொழிலாளர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக கூலித் தொழிலாளர்கள் மத்தியில் போட்டி தீவிரமடைகிறது. ''...வேலை கேட்டு உயர்த்தப்படும் கரங்களது காடு மேலும் மேலும் அடர்த்தியாகிச் செல்கிறது, அதே போது இந்தக் கரங்கள் மேலும் மேலும் மெலிந்து செல்கின்றன.''* நெருக்கடிகளும் தொழிலாளர்களுக்குப் பேராபத்தாக இருக்கின்றன; தொழிலாளர்கள் திரள்திரளாக நெருக்கடிகளில் அழிகிறார்கள்.

மார்க்ஸ் ஐந்தாவது கட்டுரையைப் பின்வருமாறு முடிக்கிறார்: ''மூலதனம் விரைவாய் வளருமாயின், தொழிலாளர்களிடையிலான போட்டி ஒப்பிடற்கரியவாறு மேலும் விரைவாய் வளருகிறது, அதாவது தொழிலாளி வர்க்கத்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கம் 70.

தின் வேலை வாய்ப்புகளும் பிழைப்புச் சாதனங்களும் அதே அளவுக்கு விரைவாய் சார்புநிலையில் குறைகின்றன; ஆயினும் மூலதனத்தின் விரைவான வளர்ச்சியே கூலியுழைப்புக்கு மிகவும் சாதகமான நிலைமையாய் இருக்கிறது.*

*மூலதனத் திரட்சி தொழிலாளர்களின் நிலைமையை எப்படி பாதிக்கிறது என்பதை மார்க்ஸ் தத்ரூபமாகச் சித்திரிக்கிறார். அது வளர்ச்சியடைகின்ற பொழுது புதிய இயந்திரங்கள் தொழிலாளர்களை அகற்றுகின்றன, வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. மார்க்ஸ்* கூலிகள் என்னும் *திருத்தம் செய்யப்படாத கையெழுத்துப் பிரதியில் மூலதனத் திரட்சிக்கும் வேலை வாய்ப்புகள் சார்புநிலையில் குறைதலுக்கும் உள்ள இடைத்தொடர்பை அதிக நுணுக்கமாக எடுத்துக் கூறுகிறார். அவர் உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறார்: 1) பதனிடப்படுகின்ற மூலப் பொருட்கள்; 2) இயந்திரங்கள் மற்றும் நிலக்கரியைப் போன்ற பொருட்கள்; 3) தொழிலாளர்களைப் பராமரிப்பதற்குப் பயன்படுகின்ற மூலதனத்தின் பகுதி.*

*ஆகவே மார்க்ஸ் மூலதனத்தின் அங்கக உள்ளமைப்பைப் பற்றி பொதுவான உருவரையைத் தருகிறார். உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் மேற்கூறிய பகுதிகளை மாறா*

---

* அதே நூல், *பக்கம் 71.*

மூலதனம், மாறும் மூலதனம் என்று அவர் இன்னும் வரையறுக்கவில்லை; முதல் இரண்டு பகுதிகளை மாறா மூலதனம் என்று இன்னும் ஒன்று சேர்க்கவில்லை. ஆனால் அந்த வேறுபாட்டை அவர் ஏற்கெனவே வகுத்துவிட்டார். இப்பகுதிகளுக்கு இடையிலுள்ள உறவுப் பொருத்தம் மூலதனத் திரட்சியுடன் எப்படி மாறுகிறது, அந்த உறவுப் பொருத்தத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையை எப்படி பாதிக்கின்றன என்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டுவது அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. மூலதனத் திரட்சி நடைபெறுகின்ற பொழுது உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தில் கூலிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதி இயந்திரங்களுக்கும் மூலப் பொருட்களுக்கும் செலவிடுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பகுதியுடன் ஒப்பிடுகின்ற பொழுது குறைகிறது. இது உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள உறவை ஆராய்ந்து உருவாக்கப்படும் விதி.

மார்க்ஸ் முதலாளித்துவத் திரட்சியின் சர்வப் பொது விதியை வகுத்தளிப்பதை நெருங்கி விட்டார்: ‘‘உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் பொழுது இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்களாக, அதாவது மூலதனமாக மாற்றப்படுகின்ற உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் பகுதி கூலிக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மூலதனத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது அதிகமான விகிதத்தில் வளர்ச்சியடைதல் மூலதனத்

துக்கும் உழைப்புக்கும் இடையிலான உறவின் இயல்பிலிருந்து அவசியமாகத் தோன்றுகின்ற சர்வப்பொது விதியாகும்.''*

இந்த விதி செயல்படுவதன் விளைவாக மொத்த மூலதனத்தில் தொழிலாளர்களின் பங்கு மேன்மேலும் குறைகிறது. உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சியுடன் உழைக்கின்ற மக்கள் தொகை உற்பத்திச் சாதனங்களைக் காட்டிலும் வேகமாக வளர்ச்சியடைகிறது என்பது இதன் அர்த்தமாகும். தொழிலாளர்களுக்கு இடையில் போட்டி தீவிரமடைகிறது, உழைப்பின் சப்ளை அதன் தேவையைக் காட்டிலும் எப்பொழுதும் அதிகமாக இருக்கும். வேலையில்லாத தொழிலாளர்களின் சேமப்படை இருக்க வேண்டும் என்பதில் முதலாளிகள் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறார்கள்; ஏனென்றால் அப்பொழுதுதான் அவர்கள் கூலியைக் குறைக்க முடியும், பொருளாதாரத்தின் மேலெழுச்சியின் போது அதிகமான கூலித் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார். மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும் நூலை எழுதிய பொழுதே மூலதனத் திரட்சிக்கும் பாட்டாளி வர்க்கத்தின் நிலைமை க்ஷீணமடைதலுக்கும் இடையிலுள்ள காரண-காரியத் தொடர்பை நிறுவி விட்டார் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 6, p. 432.

மார்க்ஸ் இச்செயல்முறையைத் தொழிலாளர்களிடம் பின்வருமாறு விளக்கினார்: ''ஒரு வீடு பெரிதாகவோ, சிறிதாகவோ இருக்கலாம், சுற்றிலுமுள்ள வீடுகளும் அதே போல சிறிதாய் இருக்கும் வரை குடியிருப்புக்குரிய சமூகக் கோரிக்கைகள் யாவற்றையும் அது பூர்த்தி செய்கிறது. ஆனால் அந்தச் சிறிய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மாளிகை எழட்டும், உடனே அந்தச் சிறிய வீடு ஒரு குடிசையாய்க் குறுகிப் போய்விடுகிறது. அதன் சொந்தக்காரர் உரிமை கொண்டாடக் கூடியது சொற்பம் தான், அல்லது எதுவும் இல்லை என்பதை இப்பொழுது அந்தச் சிறிய வீடு புலப்படுத்தும். நாகரிக முன்னேற்றத்தைத் தொடர்ந்து அது எவ்வளவுதான் உயரமாய் வளர்ந்திடினும், பக்கத்திலுள்ள பெரிய மாளிகையும் அதே அளவுக்கோ, இன்னுங்கூட அதிக அளவுக்கோ வளர்ந்து செல்லுமாயின், ஒப்பளவில் சிறிதாயிருக்கும் அந்த வீட்டில் இருப்பவர் மேலும் மேலும் நலங் குன்றி திருப்தியில்லாதவராகவும் அதன் நான்கு சுவர்களுக்குள் கட்டுண்டு நெரிக்கப்படுகிறவராகவும்தான் குறைபட்டுக் கொள்வார்.''*

முதலாளிகளின் அரண்மனைகள் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது மெதுவாக வளர்ச்சியடைகின்ற சிறு வீட்டில் வசிக்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கங்கள் 49—50.

கின்ற தொழிலாளியின் உணர்ச்சியை மேற் கூறிய பகுதி துல்லியமாகச் சித்திரிக்கிறது.

மூலதனத் திரட்சி கூலி மற்றும் தொழிலாளர்களின் நிலைமையை எப்படி பாதிக்கிறது என்பதைப் பற்றி **கூலியுழைப்பும் மூலதனமும்** சரியான சித்திரத்தைக் கொடுத்தபடியால் அது பிற்காலத்தில் **மூலதனம்** நூலில் அநேகமாக முழுமையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மார்க்ஸ் **மூலதனத் திரட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைக்கும் உள்ள தொடர்பைப்** பற்றிய கருத்துகளை 1847 டிசம்பரில் ஜெர்மன் தொழிலாளர்களிடம் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் முதலில் வகுத்தளித்தார்; அவை 1849 ஏப்ரலில் *Neue Rheinische Zeitung*இல் பிரசுரிக்கப்பட்டன. அக்கருத்துகள் நம் காலத்துக்கு இன்னும் செல்தகைமையைக் கொண்டிருக்கின்றன.

தொழிலாளி வர்க்கம் இப்பொழுது புரட்சிகர சக்திகளின் அமைப்பு ரீதியான, ஒற்றுமையான முன்னணிப் படையாக இருக்கிறது. அதன் இடைவிடாத போராட்டத்தின் விளைவாகப் பொருளாதார மற்றும் சமூகச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, கூட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன; அது திட்டவட்டமான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வென்றிருக்கிறது.

தொழிலாளி வர்க்கம் தன்னுடைய உரிமைகளுக்கு நடத்துகின்ற அமைப்பு ரீதியான போராட்டம், அதன் அளவு வளர்ச்சியடை

தல், மேன்மேலும் புதிய வடிவங்கள் உபயோகிக்கப்படுதல் ஆகியவை உழைக்கும் மக்களின் உரிமைகளுக்கு எதிரான முதலாளிகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதில் முக்கியமான காரணிகளாக இருக்கின்றன. உலக சோஷலிஸ்ட் அமைப்பும் மற்றொரு முக்கியமான காரணியாகும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள பெருந்திரளான உழைக்கும் மக்கள் ஏகபோகங்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, பிற்போக்குவாதத்தையும் ஆயுதப் போட்டியையும் எதிர்த்து, உலக சமாதானத்தையும் சமூக முன்னேற்றத்தையும் ஆதரித்து எல்லா ஏகபோக எதிர்ப்பு சக்திகளையும் வலுப்படுத்துவதற்கு நடத்துகின்ற போராட்டத்தின் நிலைமைகளில் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் வளர்ச்சி மேன்மேலும் செயலூக்கமான தாக்கத்தைச் செலுத்துகிறது.

அதே சமயத்தில் இக்காரணிகள் மூலதனத் திரட்சி தன்னுடைய தாக்கத்தைச் செலுத்துகின்ற புறவய நிகழ்வுப் போக்கைத் தடுக்க முடியாது. ஏனென்றால் அது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளினால் உருவாகின்ற நிகழ்வுப் போக்கு ஆகும்.

கடந்த காலத்தில் நடைபெற்றதைப் போல அரசு ஏகபோக முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழிலாளி கூலித் தொழிலாளியாக இருக்கிறார். முன்பிருந்ததைப் போல அவருடைய வேலை நிலைமைகளும் பொருளாயத அந்தஸ்தும் மூலதனத் திரட்சிப் பொறியமைவினால்,

முதலாளித்துவத் திரட்சியின் சர்வப்பொது விதியினால் நிர்ணயிக்கப்படுகின்றன. முன்பிருந்ததைப் போலவே வேலையில்லாத் திண்டாட்டத்தின் கடுஞ்சுமை கூலித் தொழிலாளர்கள் மீது சுமத்தப்படுகிறது; அவர்களுடைய வேலைக்கு எப்பொழுதும் ஆபத்து நிலவுகிறது. 1970க்கள் மற்றும் 1980க்களில் வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது. உதாரணமாக, 1960க்களில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் 7 மில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். வேலையில்லாமை விகிதம் மேற்கு ஐரோப்பாவில் 2—3 சதவிகிதமாகவும் அமெரிக்காவில் 6 சதவிகிதமாகவும் இருந்தது. 1975இல் இந்த நாடுகளில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 15 மில்லியனாக அதிகரித்திருந்தது; 1980க்களின் தொடக்கத்தில் 19 மில்லியனாக இருந்தது; 1983இல் 30 மில்லியனை அல்லது வேலை செய்யக் கூடிய மக்கள் தொகையில் 10—12 சதவிகிதத்தைத் தாண்டிவிட்டது.

இன்றைய முதலாளித்துவத்தின் கீழ் தேர்ச்சியுள்ள மற்றும் உயர் தேர்ச்சியுள்ள தொழிலாளர்களில் பலர் வேலையிழந்திருக்கிறார்கள். உதாரணமாக, அமெரிக்காவில் 1981இல் வேலையில்லாதவர்களின் மொத்த எண்ணிக்கையில் இவர்கள் 30.1 சதவிகிதமாக இருந்தனர். வாலிபர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட குழுக்களில் ஒன்றாக இருக்கிறார்கள். 1982இல்

இருபத்தைந்து வயதுக்குக் குறைந்த வாலிபர்கள் மத்தியில் வேலையில்லாமை பிரிட்டனில் 17—20 சதவிகிதமாகவும் மேற்கு ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயினில் 27—30 சதவிகிதமாகவும் இருந்தது. அதே ஆண்டில் அமெரிக்காவில் வேலையில்லாதவர்களில் 41 சதவிகிதத்தினர் இருபத்து நான்கு வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தார்கள்.

வேலையில்லாதவர்கள் கட்டான உடலுடைய கூலித் தொழிலாளர்களின் மொத்தத் திரளின் பிரிக்க முடியாத பகுதியாகும். ஆகவே தொழிலாளர் சேமப்படையின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற பொழுது மொத்த தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை க்ஷீணமடைகிறது. வேலையில்லாதவர்களின் வாழ்க்கைத் தரங்கள் மிகவும் கீழாக இருப்பது இதற்குப் பிரதான காரணமாகும். அவர்கள் எல்லோருக்கும் வேலை இல்லாதவர்களுக்குரிய உதவித் தொகை கிடைப்பதாகக் கூற முடியாது. 1982இல் பிரிட்டனில் வேலையில்லாதவர்களில் 35 சதவிகிதத்தினரும் மேற்கு ஜெர்மனியில் மொத்த எண்ணிக்கையில் பாதிக்குக் குறைவானவர்களும் மட்டுமே அத்தகைய உதவிகளுக்குத் தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள். 1985இல் அமெரிக்காவில் வேலையில்லாதவர்களில் 25 சதவிகிதத்தினருக்கு மட்டுமே உதவித் தொகை அளிக்கப்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம் ஏராளமானவர்களை வறுமையின் விளிம்புக்குத் துரத்து

கிறது; அவர்கள் அரசு அல்லது தனியார் உதவிகளை முற்றிலும் நம்பிப் பிழைப்பு நடத்த வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது! முடிவில்லாத வேலையில்லாத் திண்டாட்டம் வறுமை மற்றும் வகையற்ற நிலையின் பல்வேறு வடிவங்களைத் தீவிரப்படுத்துகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிக அளவில் இருத்தல் முதலாளிகள் உழைக்கும் மக்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்துவதற்கும் கூலிகளைக் குறைப்பதற்கும் உதவுகிறது. ஏகபோக மூலதனம் அதற்கென்று பல்வேறு புதிய முறைகளைப் பயன்படுத்துகிறது. தற்காலிகமாக அல்லது பதிவேடுகளில் எழுதாமல் தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல், ஒரு வேலையை இரண்டு அல்லது மூன்று நபர்கள் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய முறைகள் சமீப ஆண்டுகளில் பரவலாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. முதலாளிகள் தொழிலாளர் சம்பந்தப்பட்ட சட்டங்களை மீறுவதற்கு இத்தகைய முறைகள் உதவுகின்றன. அவர்கள் நாட்டிலுள்ள குறைந்த பட்சக் கூலி விகிதத்துக்கு அல்லது கூட்டு ஒப்பந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட கூலிக்குக் குறைவான தொகையை இந்த ரகத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்களுக்கு ஊதியமாகத் தருகிறார்கள். அவர்களுக்கு சமூகக் காப்புறுதிகளுக்கு உரிமையில்லை; மேலும் அவர்கள் அதிகமான சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

இன்று (உதாரணமாக, அமெரிக்காவில்) உலோகவியல், கார் தயாரித்தல், சுரங்கத் தொழில் மற்றும் இதர தொழில் துறைகளில் உள்ள முதலாளிகள் திவாலாகிவிட்டதாகப் போலி வாக்கு மூலங்களைக் கொடுக்கிறார் கள்; இத்தந்திரத்தின் மூலம் தொழிலாளர் களின் கூலியைக் குறைக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கு கிறார்கள்; சிறிது காலத்துக்குப் பிறகு அதே தொழிலாளர்களைக் குறைந்த கூலி விகிதத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்கிறார் கள். அமெரிக்காவில் ஒன்பதாவது பெரிய விமானக் கம்பெனியான காண்டினென்டல் ஏர் லைன்ஸ் 1984இல் திவாலாகிவிட்டதாக அறி வித்து 12,000 அலுவலர்களை வேலை நீக்கம் செய்தது. பின்னர் அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு அவர்கள் முன்பு பெற்றதில் பாதி ஊதியத்துக்கு மறுபடியும் வேலை கொடுத்தது. சில கம்பெனிகள் திவால் அறி விப்புச் செய்யப் போவதாகப் பயமுறுத்தி கூலியைக் குறைப்பதற்குத் தொழிலாளர்களை ஒத்துக் கொள்ளும்படி செய்கின்றன. தொழிற் சங்கம் அதற்கு உடன்படாவிட்டால் தொழிற் சாலை மூடப்படுகிறது, தொழிலாளர்கள் வேலையிழக்கிறார்கள்.

முதலாளித்துவம் வளர்ச்சியடைகின்ற பொழுது முந்திய சமூக பொருளாதாரஅமைப்பு களில் நிலவிய உறவுகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது சாராம்சத்தில் புதிய உறவுகளை

அமைக்கிறது. முதலாளித்துவ அமைப்பில் கொள்விளை மற்றும் விற்பனை ஆதிக்கம் செலுத்துகின்ற உறவுகளாக இருக்கின்றன. அத்தகைய உறவுகள் கூலித் தொழிலாளர் களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலும் நிலவு கின்றன. முதலாளித்துவம் உழைப்பாளி களைப் பாட்டாளி வர்க்கமாகவும் அவர் களுடைய உழைப்பு நிலைமைகளை மூலதன மாகவும் மாற்றுகிறது என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

முதலாளித்துவ ''உற்பத்தி உறவுகள் இல்லை என்றால் உற்பத்திச் சாதனங்கள்—பாட்டாளி வர்க்கத்தின் விடுதலை மற்றும் புதிய சமூகத்தின் அடிப்படைக்குப் பொரு ளாயத சாதனங்கள்—படைக்கப்பட்டிருக்க முடியாது, பாட்டாளி வர்க்கம் ஒற்றுமை மற்றும் வளர்ச்சியின் மூலம் பழைய சமூகத் தையும் தன்னையும் புரட்சிகரமாக்குகின்ற பாதையைப் பின்பற்றியிருக்க முடியாது'' என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்.*

மேற்கூறிய வாசகத்தில் மார்க்ஸ் முத லாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கின் அர்த்தத்தை எடுத்துக்கூறுகிறார். முதலாளித் துவ வளர்ச்சியின் உட்பொறியமைவு புதிய, சோஷலிஸ்ட் சமூகத்தின் புறவயமான பொரு ளாயத முன்நிபந்தனைகள் தோன்றுவதற்கு இட்டுச் செல்கிறது.

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 6, p. 436.

அதே சமயத்தில் முதலாளித்துவத் திரட்சிச் செயல்முறையின் போது தொழிலாளி வர்க்கம் வளர்ச்சியடைகிறது, அதன் ஒருங்கிணைவும் ஸ்தாபனமும் வலுப்படுத்தப்படுகின்றன, சமூக வளர்ச்சியில் அதன் முக்கியமான பாத்திரமும் இடமும் வெளிப்படையாகத் தெரிகின்றன. தொழிலாளி வர்க்கம் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுகின்ற தகுதியுள்ள வர்க்கமாக வளர்ச்சியடைகிறது. முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளி வர்க்கம் முதலாளிகளின் சுரண்டலின் குறிப்பொருள் என்பது மட்டுமன்றி வரலாற்று நடவடிக்கையின் அகப்பொருளாகவும் இருக்கிறது, அது தன்னுடைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டும், சமூக வளர்ச்சியின் மொத்தப் போக்கின் மீதும் மேன்மேலும் அதிகமான தாக்கத்தைச் செலுத்த வேண்டும் என்பவற்றைத் தொழிலாளர்களுக்கு விளக்கிக் கூறுவது அவசியம் என்று மார்க்ஸ் கருதினார்.

மார்க்சினுடைய தத்துவத்தின் மெய்மையை வரலாறு நிரூபித்திருக்கிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001

முன்னேற்றப் பதிப்பகம், கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி.இ. லெனின் ஆகியோரின் நூல்கள், கட்டுரைகளோடு கூட மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைக் கற்பவர்களுக்கு உதவும் பொருட்டு மார்க்சிய-லெனினிய ஆசான்களின் தனிப்பட்ட படைப்புகளைப் பற்றிய சிறு பிரசுரங்களையும் வெளியிடுகிறது.

இப்பிரசுரத்தின் ஆசிரியரான டாக்டர் வ. மக்ஸிமொவா, மார்க்ஸ் எழுதிய ''கூலியுழைப்பும் மூலதனமும்'' என்னும் நூல் எப்படி தோற்றுவிக்கப்பட்டது என்று விளக்குகிறார். மார்க்சால் ஆராயப்பட்ட உழைப்புச் சக்தி, கூலி, மூலதனம், மூலதனத் திரட்சி ஆகிய முக்கிய பொருளாதார வகையினங்களின் மீது ஆசிரியர் கவனம் செலுத்துகிறார். இன்று முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் உள்ள தொழிலாளி வர்க்கம் தன் உரிமைகளுக்காக நடத்தும் போராட்டத்திற்கும் மார்க்சின் கருத்துகளுக்கும் இடையிலான தொடர்பை மக்ஸிமொவா காட்டுகிறார்.

முன்னேற்றப் பதிப்பகம்

ISBN5-01-001464-5